Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 288

ஞாயிற்றுக்கிழமை 10 செப்ரெம்பர் 2023

ஆவணி 24 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054


# தொல்லியல் திணைக்களத்துக்கு வடக்கில் 80 சிங்களவர் நியமனம்

## ஏற்கனவே நியமிக்கப்பட்ட தமிழர்கள் வேறு திணைக்களங்களுக்கு மாற்றம்

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 10**

**தொல்லியல் திணைக்களத்தின் வடக்கு அலுவலகங்களுக்கு 80 சிங்களவர்கள் இதுவரை நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் இதுவரை 33 பேர் கடமைகளைப்பொறுப்பேற்றுள்ளனர். இதேவேளை - தொல்லியல் திணைக்களத்தின் கீழ் பணியாற்றிய தமிழர்கள் 5 பேர் ரயில்வே திணைக்களத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.**

»04



அளவெட்டியில்

## தீக்கிரையாகிய அரிசி ஆலை!

யாழ்ப்பாணம், செப். 10
அளவெட்டி வடக்கில் அரிசி ஆலையொன்றில் தீ விபத்து இடம்பெற்றுள்ளது. அரிசி ஆலையில் பணிகள் நிறைவடைந்து உரிமை

»04

ஆளுநரின் உத்தரவுக்கு 'அரோகரா'

## இலுப்பைக்குளத்தில் நேற்று விகாரைக்கு பெயர்ப்பலகை

பதற்றத்தில் திருகோணமலை



திருகோணமலை, செப். 10
நிலாவெளி பிரதான வீதியின் பெரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள இலுப்பைக்குளம் பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர் பொறிக்

»04

## குற்றத்தை ஒப்புக்கொள்ளுங்கள் மன்னிப்பதற்கு தயாராகவுள்ளேன்

*ஈஸ்டர் தாக்குதலாளிகளுக்கு கர்தினால் வேண்டுகோள்*



கொழும்பு, செப். 10
ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் தங்களுடைய தவறை ஒப்புக் கொண்டால் நான் உட்பட கத்தோலிக்க திருச்சபை அவர்களுக்கான மன்னிப்பை வழங்கத் தயாராக உள்

»04

## ஜனாதிபதி பதவியைத் தந்தால் அரசுடன் இணையத் தயார்

மைத்திரியின் பேராசை



கொழும்பு, செப். 10
ஜனாதிபதி பதவியை தமக்கு வழங்கினால், அரசாங்கத்துடன் இணைந்துக் கொள்ளத் தயார் என சிறிலங்கா

»15

## சஹ்ரானின் சகோதரரை சிறையில் சந்தித்தேன்

*ஒப்புக்கொள்கிறார் பிள்ளையான்*

கொழும்பு, செப். 10
ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவத்தில் பிரதான சூத்திரதாரி எனக்கருதப் படும் சஹ்ரான் ஹாசிமின் சகோ

»04

காணிகளை அடாத்தாகப் பிடிப்பது

## தமிழர்கள் அல்லர்: சிங்களவர்களே

*தவறு எமது பக்கத்தில்தான் என்கிறார் சந்திரிகா அம்மையார்*

கொழும்பு, செப். 10
வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் பலவந்தமாகக் காணி பிடிக்கவில்லை. அவர்களின் காணிகளை பலவந்தமாகப் பிடித்துதான் சிங்கள குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது. தவறு எமது பக்கத்தில்தான் உள்ளது -என்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி

»15

## உதயன் மீதான தாக்குதல்கள்: கண்கலங்கிய பாடகர் அக்ஷயா

யாழ்ப்பாணம், செப். 10
உதயன் பத்திரிகை அலுவலகத்துக்கு நேற்று வருகை தந்த 'சரிகமப' பாடகரான அக்ஷயா, உதயன் பத்

»04




வவுனியா

## விபத்தில் பொலிஸ் அதிகாரி உயிரிழப்பு

வவுனியா, செப். 10
வவுனியாவில் நேற்று முன்தினம்இரவு இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் அதிகாரி சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

»15

கொக்குத்தொடுவாய் புதைகுழி

## புலிகளின் இலக்கத்தகடு கண்டறிவு: ஆண்களின் ஆடைகளும் மீட்பு

விரிவுகள்:- பக் - 04 இல்

சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதே இல்லை!

## பிரிட்டன் ம.உரிமை ஆலோசகர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

**இலங்கையில் குற்றமிழைக்கும் படையினரோ, அரசியல்வாதிகளோ என்றும் தண்டிக்கப்படுவதில்லை. இந்த வரலாற்றை மாற்றும் வரை இலங்கையில் என்றுமே அமைதி ஏற்படப்போவதில்லை.**



- இவ்வாறு பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மனித உரிமை ஆலோசகர் அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இந்த வருடம் கறுப்பு ஜூலையின் 40 ஆவது நினைவுதினம்.

இலங்கைத் தலைநகரில் ஏற்பட்ட இந்த வன்முறையால் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல ஆயிரம் பேர் நாட்டைவிட்டுத் தப்பியோடியிருந்தனர். பல ஆயிரம் உடைமைகள் சேதமாக்கப்பட்டன. அதுவே முழு அளவிலான போருக்கு வழி வகுத்திருந்தது.

இறுதிக்கட்டப் போரிலும் பல்லாயிரம் மக்கள் கொல்லப்பட்டனர். இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் பலர் காணாமற் போயுள்ளனர்.

தமதுபிள்ளைகளைத் தேடி உறவினர்கள் கடந்த 5 வருடங்களாகப் போராடிவருகின்றனர். அங்கு மனிதப் புதைகுழிகளும் முளைத்துள்ளன.

ஆனால் இவை எவற்றுக்கும் இதுவரைஅங்கு நீதிகிடைக்கவில்லை. வாக்குறுதிகளை வழங்குவது இலங்கை அரசுகளின் வழக்கமாகிவிட்டது. உதாரணமாக 'உடலகம' ஆணைக்குழுவை கூறலாம். மஹிந்த ராஜபக்சவே அதனை அமைத்தார். அவரின் ஆட்சிக் காலத்தின் முதலாண்டுப் பகுதியில் இடம்பெற்ற 17 படுகொலைகள் தொடர்பான விசாரணை அது.

ஆனால் 2011 ஆம் ஆண்டு அவர்கள் நல்லிணக்கமும் கற்றுக் கொண்ட பாடங்களும் என்ற ஆணைக்குழுவை அமைத்தனர். இந்தக் குழு காலத்தைக் கடத்துவதிலும், அனைத்துலக விசாரணைகளை தடுப்பதிலும் தான் கவனம் செலுத்தியது.

பொதுமக்களின் படுகொலைகளில் படையினருக்குள்ள தொடர்புகளையும் அது மறைக்க முயன்றது. அந்தவகையில் குற்றங்களுக்கான விசாரணைகளை அரசுகளே குழப்பி அதனை அனைத்துலக மட்டத்துக்குக் கொண்டு செல்லாது தடுக்கின்றன.

இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும் என்றால் விசாரணைக் குழுக்கள் சுதந்திரமாக இயங்க வேண்டும். அவர்களின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும்- என்றார். (ச-இ)

'சனல் – 4' விவகாரம்

# விசாரணை செய்வதற்கு ஜனாதிபதியால் குழுக்கள்

கொழும்பு, செப் 10

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பிரிட்டன் தளமான 'சனல் -4' அலைவரிசை ஒளி பரப்பிய விசாரணை மேற்கொள்வதற்கு ஓய்வுபெற்ற 3 சிரேஷ்ட அரச அதிகாரிகள் கொண்ட குழுவொன்றை அமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சிவில் சேவையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்தக் குழு நியமிக்கப்படவுள்ளது.

குழுவின் பிரதிநிதிகள் நியமனமானது ஜனாதிபதியின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை 'சனல்- 4' வெளிப்படுத்திய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்படவுள்ளது. ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்கவுக்கு அந்தப் பணியை ஜனாதிபதி வழங்கியுள்ளார் என்று கூறப்படுகிறது. (ச-44)

# வாகன இலக்கத்தகடு பட்டியல் பார்வைக்கு

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத் தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 23 ஆம் திகதி யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்துக்கு வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தப் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ச)



# அச்சத்தைப் போக்குவதற்கு மருத்துவத்துறையில் மாற்றம்

கொழும்பு, செப். 10

மருத்துவமனைகளை நாடுவதற்கு தற்போது மக்கள் அஞ்சுகின்றனர். சுகாதாரத்துறை மீது மக்களுக்கு நம்பிக்கையற்றுப் போயுள்ளது. மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டுமாயின் சுகாதாரத்துறையில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

சுகாதாரத்துறையில் மோசடி இடம்பெற்றுள்ளது. சுகாதாரத்துறையால் இன்று பெரும் அசௌகரியங்களை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

கண்சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் சென்றால் குருடாக்கி அனுப்புகிறார்கள்.

சிறுநீரகத்தில் சிக்கல் இருப்பதாகச் சென்றால் இரண்டு சிறுநீரகங்களையும் எடுத்துவிடுகிறார்கள். காய்ச்சலுக்கு மருந்து எடுக்கச் சென்றால் கையை வெட்டிவிடுகிறார்கள். சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் செல்லாமல் வீடுகளிலேயே இறப்பது நல்லது என்று நினைக்கும் நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டின் சுகாதாரத்துறை மாத்திரமல்ல நாட்டின் எதிர்காலம் தொடர்பாகவும் மக்கள் நம்பிகை இழந்துள்ளனர். மக்களுக்கு சுகாதாரத்துறை தொடர்பாகவும் இந்த அதிகாரிகள் தொடர்பாகவும் நம்பிக்கை இல்லை. இதில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமே மக்களுக்கு சுகாதாரத்துறை தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் - என்றார். (ச-இ)

# அனுமதிபெறாத ஆலைகள் மீது நடவடிக்கை!

கொழும்பு, செப். 10

சுற்றுச்சூழல் அனுமதி பெறப்படாத தொழிற்சாலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நாடாளாவிய ரீதியில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை கழிவு முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் அஜித் வீரசுந்தர தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

எந்த ஒரு தொழிற்சாலைகளின் சேவைகளை ஆரம்பிப்பதற்கு முன்பு சுற்றுச்சூழல் அனுமதி பெறவேண்டியது அவசியமாகும்.

அந்தவகையில் சுற்றுச்சூழல் அனுமதி பெறாத தொழிற்சாலைகளை அடையாளம் காண விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)


**பாரிய கட்டடம், காணி விற்பனைக்கு**

A-9 வீதி, திருமுறுகண்டி கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள நான்கு A/C அறைகள் மற்றும் சாதாரண அறைகளுடன் கூடிய தங்குமிடம், உணவகம் என்பன உள்ளடங்கலாக ஒரு ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**077 711 4226, 077 3866 250**

(CR 40549) A-1

**அலுவலக மேற்பார்வையாளர் தேவை**

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகில் இயங்கும் தனியார் நோயாளர் பராமரிப்பு நிலையத்திற்கு அலுவலக பெண் மேற்பார்வையாளர் தேவை.

அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

**ஆரம்ப சம்பளம்** : 20,000/= வேலையின் திறமைக்கு ஏற்ப அதிகரிக்கப்படும்.

விருப்பமானவர்கள் 077 074 0351 என்ற வட்சப் நம்பருக்கு தங்களுடைய விபரங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(CS 26182) A-1

**தொடர்பு: 077 074 0351**

**கண்ணீர் அஞ்சலி**



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளர்
திருமதி தர்சினி தயானந்தன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

**நடராசா தியாகராசா**

அவர்கள் 09.09.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

(CR 40547) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sampath Bank Fitch Ratings 'A(lka)'/RWN




"Health Is Wealth"

In Order To Safeguard The Lives And Livelihoods Of Our Senior Citizens
Sampath Sanhinda Saver Offers

## Over Rs.150 Million In Free Medical Benefits!

Obtain medical services from partner hospitals and medical service providers throughout the island.

Sampath Sanhinda Saver is the only senior citizen savings account to pay interest twice a month.
To open your Sampath Sanhinda Saver Account visit the nearest Sampath Bank branch!

Conditions apply

Visit www.sampath.lk to view the full list of medical establishments partnered with Sampath Sanhinda Saver.

Sampath Sanhinda Saver
For the young at heart

1332 www.sampath.lk

Sampath Bank
WE PRESENT YOUR FUTURE

Sampath Bank PLC- Company PQ 144 Sampath Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

Access Energy Engineering (PVT) LTD

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு

விசேட விலைக்கழிவு

## அதிக மின் கட்டணத்தை செலுத்துகிறீர்களா ?

சூரிய மின் கட்டணத்துக்கு மாறுங்கள் உங்கள் மின் கட்டணத்தை சேமியுங்கள்

Energy Line
+94 777528940, +94 771208700






Jaffna housing and construction exhibition

எமது குழுவினர் உங்களை நேரில் சந்திக்க வருகின்றனர்

SEP 15 | SEP 16 | SEP 17

Muttraweli ground, Jaffna

Jinko Solar Trina solar REC JA SOLAR AE SOLAR

For More Information info@accessenergy.lk, www.accessenergy.lk
Energy Line +94 777528940, 021 222 3829, + 94 771208700
Location No100, Main Street, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## உதயன்...

ரிகை மீதான கடந்த காலத் தாக்குதல் தொடர்பான ஒளிப்படங்களைப் பார்த்து கண்கலங்கினார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் 'ஸீ' தமிழ் தொலைக்காட்சியின் 'சரிகமப - 3' இன் இறுதிப்போட்டியாளர்கள் 6 பேர் யாழ்பாணத்தில் நடைபெறும் இசை நிகழ்வுக்காக வருகை தந்துள்ளனர்.

புருசோத்தமன், ராகவர்சினி, லக்ஸ்ஸனா, நாகஅர்ஜுன், ஜீவன், அக்ஷயா ஆகிய 6 பேரும் உதயன் பணிமனைக்கு நேற்று மதியம் வருகை தந்தனர். அவர்களை உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் வரவேற்றார். அவர்களுக்கு நினைவுப் பரிசிலும் வழங்கப்பட்டது.

அதன் பின்னர் உதயன் மீது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் தொடர்பான ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பகுதியைச் சென்று பார்வையிட்டனர். கடந்த காலத் தாக்குதல்களின் எச்சங்களும் அவர்களுக்கு காண்பிக்கப்பட்டன. இதன்போது அக்ஷயா கண்கலங்கினார்.

"இலங்கையின் சந்தோசமான முகத்தையே இதுவரை பார்த்திருந்தேன். திடீரென இவ்வாறான ஒன்றைப் பார்த்தமையால் கண்கலங்கினேன்" என்று அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-5)

## தொல்லியல்...

ஒரு லட்சம் வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழேயே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். பிராந்திய அலுவலகத்துக்கு 30 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 8 பேர் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பிராந்திய அலுவலகத்துக்கு 50 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 25 பேர் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். இவர்கள் தொழிலாளர்கள் தரத்துக்கே நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்த நியமனங்கள் ஊடாக முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட அலுவலகங்கள் தனிச் சிங்களவர்களால் நிரம்பியுள்ளது. தற்போது நியமிக்கப்பட்ட சிங்களவர்களும் அரசியல் செல்வாக்கின் ஊடாக இடமாற்றத்தைப் பெறுவதற்கு முனைப்பாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை- தொல்பொருள் திணைக்களத்தில் ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 5 தமிழர்கள் பணியாற்றிய நிலையில் அவர்கள் ரயில்வே திணைக்களத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். (அ-ஒ-125)

## தீக்கிரையாகிய...

யாளர் நேற்றுமுன்தினம் பூட்டி விட்டு, மீண்டும் நேற்றுக் காலை 8 மணியளவில் அரிசி ஆலையை திறக்கச் சென்றார். அப்போது, அரிசி ஆலை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்ததைக் கண்ட உரிமையாளர் அயலவர்களை அழைத்து, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்.

இதன்போது பல இலட்சம் ரூபா பெறுமதியான அரிசி ஆலை இயந்திரங்கள், ஏனைய உபகரணங்கள், தளபாடங்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. அதனைத் தொடர்ந்து, அரிசி ஆலை உரிமையாளரால் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மின் ஒழுக்கு காரணமாக தீ பரவியுள்ளதா அல்லது தீ வைக்கப்பட்டதா என்ற விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை. இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-27)

## குற்றத்தை...

ளது-என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். அவ்வாறு செய்ய முடியவில்லை எனின் நாம் மதங்களைப் பின்பற்றுவதால் உள்ள பயன்தான் என்ன ? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பு - கொச்சிக்கடை தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வழிபாடுகளின் பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்ன நடந்தது என்பது எங்களுக்கு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. மேலும் மேலும், புதிய காரணங்கள், புதிய விடயங்கள் வெளிக்கொணரப்பட்டு வருகின்றன. இவ்வாறான விடயங்களால் சிலருக்கு சில சமயங்களில் கோபம் கூட வர வாய்ப்புண்டு. ஏனெனில் இந்த விடயங்களில் அவர்களது பெயர் பயன்படுத்தப்படுகிறது. அவர்களுக்கும், குறித்த சம்பவத்துக்கும் எந்த விதமான தொடர்புகளும் இல்லை எனில் அவர்கள் பயப்படவேண்டிய அவசியம் இல்லை. சாதாரணமான, உண்மைத் தன்மையை வெளிப்படுத்தக்கூடிய ஆய்வொன்றை நடத்தி, நடந்தது என்ன ? என்பது தொடர்பில் தெரிவியுங்கள். அது அவ்வளவு கஷ்டமான ஒரு விடயம் அல்ல.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எமது நாட்டின் தலைவரிடம் மிகவும் தேவையுடன் கோரிக்கை ஒன்றை விடுக்கின்றேன். இதோ, ஒவ்வொன்றாக உண்மைகள் வெளிவர ஆரம்பித்துள்ளன, அதனால் இப்பொழுதாவது நாங்கள் கேட்கும், உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான ஒரு ஆய்வை மேற்கொள்ளுங்கள்.

அதேபோல் குறித்த சம்பவத்தில் எவரொருவரின் பெயர் தெரிவிக்கப்படுகிறதோ அவர்கள் மரியாதையுடன் தத்தமது பதவிகளிலிருந்து விலக வேண்டும். அது தொடர்பில் உரிய ஆய்வுகளை நடத்த முன்வர வேண்டும். அதுவே நேர்மையான முறை. நேர்மை என்பது பதவிகளுக்கு பின்னால் மறைந்துகொள்வது அல்ல. தான் தவறு செய்திருப்பின் அதனை ஆராய வழிவிடுவது தான் நேர்மை.

அவ்வாறு இல்லையெனில், தவறு செய்ததை ஒப்புக்கொள்ளுதல். அவ்வாறு தவறு செய்திருந்தால், அதனை ஒப்புக்கொள்ளுங்கள் நாம் மன்னிக்க தயாராக உள்ளோம்.

தவறை ஒப்புக்கொண்டதால் நெல்சன் மண்டேலா தவறிழைத்தவர்களுக்கு மன்னிப்பை வழங்கினார் என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## இலுப்பைக்குளத்தில்...

கப்பட்ட பதாகை நேற்றுக்காலை பிக்குகளால் நடப்பட்டுள்ளதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பதாகை நடப்பட்டதன் பின்னர் அப்பகுதியில் பொலிஸார் சிலர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிங்கள மக்களின் குடியிருப்பு இல்லாத பகுதியில் குறித்த விகாரை அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் இச்செயற்பாடானது இனங்களுக்கிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

விகாரைக்கான பணிகளுக்கு ஆளுநரால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இலுப்பைக்குளத்தில் விகாரை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-ஒ-இ)

## சஹ்ரானின்...

தரரை சிறையில் இருந்த போது சந்தித்தேன். -இவ்வாறு பிள்ளையான் எனப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வானொலியில் ஒலிபரப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் இதனை குறிப்பிட்டார். 'சஹ்ரானின் சகோதரர் ஐ.எஸ். அமைப்பு மீதான ஈர்ப்பைக் கொண்டிருந்ததை அவதானித்தேன். அவரிடம் எந்தவொரு தாக்குதலுக்காகவும் உதவிகளைக் கோரவில்லை' என்று குறிப்பிட்டார். 'சனல் - 4' ஊடகம் அண்மையில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வெளியிட்ட காணொலியில் சிறையிலிருந்தே பிள்ளையான் தாக்குதலுக்கு திட்டமிட்டிருந்தார் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,-)

## புலிகளின்

முல்லைத்தீவு, செப். 10

மனிதப் புதைகுழி அகழ்வில் நேற்றைய தினம் முதல் தடவையாக ஆண்களினது எனச் சந்தேகிக்கும் ஆடைகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் தகடும் கண்டுபிடிக்கப்பட்டது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த 6ஆம் திகதியிலிருந்து இடம்பெற்று வருகின்றன.

இதுவரை காலமும் பச்சை நிறத்திலான ஆடைகளே கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. நேற்று முதல் தடவையாக கறுப்பு நிறத்திலான ஆடைகள் தென்பட்டுள்ளன. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின், த.வி.பு. இ. 1333 என்ற இலக்கத்தகடும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதேவேளை - புதைகுழியில் மேலும் பல அடுக்குகளில் எலும்புக்கூடுகள் இருக்கக்கூடும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் வெற்றிக்கு ஒருவர் உரிமை கோர முடியாது!

## முன்னாள் இராணுவ அதிகாரிகள் பிடுங்குப்பாடு

**கொழும்பு, செப்.10**

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உலக நாடுகள் உதவின. ஏன் ஒசாமா பின்லேடன்கூட ஏதோவொரு விதத்தில் உதவினார் என்றே கூறவேண்டும். போர் முடிவு என்பது கூட்டு முயற்சியால் கிடைத்த வெற்றி, மாறாக தனிநபரால் அது சாத்தியப்படவில்லை.**

- இவ்வாறு உள்நாட்டுப் போர் ஆரம்பம் முதல் அது மௌனிக் கப்படும்வரை போர்க்களத்தில் இருந்தார் எனக் கூறப்படும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித் தார்.

இலங்கையில் இறுதிக்கட்டப் போரை வழிநடத்திய இராணு வத் தளபதியான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகாவால் முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இவ் வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:

2010ஆம்ஆண்டில்ஷாலேஎன் பவருடன் இணைந்து பொனி பஸ் பெரேரா என்பவர் நாடு முழுவதும் குண்டுகளை வெடிக் கச்செய்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியிருந்தார். அதை வன்மையாகக் கண்டிக்கின் றேன். இந்தக் காலப்பகுதியில் நாட்டில் எந்தவொரு இடத்திலும் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற வில்லை. இராணுவத்தில் இருக்கும்போது என்னுடன் இருந்த முரண்பாடுகளால் அவர் இப்படியானதொரு குற்றச் சாட்டை முன்வைத்திருக்கலாம்.

போரைத் தனித்து முடிவுக்கு கொண்டுவந்ததாக பொன்சேகா கருதுகின்றார் போலும், போர் என்பது கூட்டு முயற்சியாகும். சிறப்புரிமைக் குள் ஒளிந்து கொண்டு நாடாளுமன்றத்துக் குள் இருந்துகொண்டு இவ்வாறு கருத்து வெளியிடாமல் வெளி யில் வந்து வெளியிட்டால் அதற்கு எதிராகச் சட்டநடவ டிக்கை எடுக்கக்கூடியதாக இருக் கும்.

இந்தியா புலனாய்வுத் தகவல் கள் உள்ளிட்ட சிற்சில உதவி களை வழங்கியது. அதேபோல தற்போதைய ஜனாதிபதி, புலி கள் அமைப்பில் இருந்து கரு ணாவைப் பிரித்தெடுத்து அந்த அமைப்பை பல வீனப்படுத்தினார். இதுதான் கூட்டு முயற்சியாகும்.

பின்லேடன்கூட உதவினார் என்றே சொல்ல வேண்டும், அவர் அமெரிக்காமீது தாக்கு தல் நடத்தியதால், பயங்கர வாதம் குறித்தான அமெரிக்கா வின் நிலைப்பாடு மாறியது , நிதி முடக்கம் உட்பட பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

போர் வெற்றி என்பது தனிநப ருக்குரியது அல்ல. அது கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றி. போர் வெற்றி என்பது உயிர்த் தியாகம் செய்த, அங்கவீனம் அடைந்த படையினருக்குத் தான் சென்றடையவேண்டும்- என்றார். (எ-44)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பொறுமையுடன் செயற் படவேண்டிய நாள். முக்கிய முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிட வும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். புதிய ஆடை, ஆபரணங்க ளின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவை தவிர்க்கவும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெ டுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்பு களும் இடையூறுகளும் நீங்கும். பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவ தைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகை யால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனக் கசப்புகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூல மான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பா ராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தா லும், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடு வீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோ ரின் ஆதரவு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்பு குறையும். மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கவனம் தேவை.

**மீனம்:** புதிய முயற்சிகளை தொடங்க வும். குடும்பம் தொடர் பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. பணவரவு [illegible]









### நல்லைப் பதியை வணங்கிடுவோம்

நித்தம் மணியொலிக்கும் நல்லூரின் வீதியில்
நீலமயில்வாகனன் வடிவேலுடன் காட்சி தருகின்றான்
சீலமிகு அடியார்கள் தினம் திருப்புகழ்- திருமுறை
வாயில் ஒலித்திடவே- மாலவன்
மருகன் மங்கையரிருவருடன் அருட்காட்சி தருகின்றான்
ஞாலம்புகழ் நல்லைப் பதியினை – நாமும்
வணங்கி யின்புறுவோம்

**ப.பாலசுப்பிரமணியம்,**
**வேலணை**

### நல்லூரில் நன்னீராடும் வேலவா

நல்லூரில் வீற்றிருக்கும் வேலவா!
வேலின் தீர்த்தம் அன்பு அருளினைத் தரும்
வேலின் தீர்த்தம் வல்லமை தரும் வறுமை போக்கு
வேலின் தீர்த்தம் தொல்வினைகள் யாவும் தொலைந்து போகும்
வேலின் தீர்த்தம் வையகத்தை காத்தருளும்
வேலின் தீர்த்தம் வஞ்சகர்களை அழிக்கும்
வேலின் தீர்த்தம் உள்ளன்போடு வழிபடுவோர்க்கு தேனுமிர்தம்

**விசு.இராசநாயகம்**

### வேல்காட்டி வந்தான் நல்லூரான்

வாரணமுகத்தோன் தம்பி
வரமது நல்கும் வள்ளல்
தாரணி வணங்கும் நல்லைத்
தனிப்பெருங் கோயில் கொண்டு
ஆரணங்கிருவரோடு அபிநயித்து
அருளும் கந்தன்
காரிருள் போயகலக் கையில்
வேல் காட்டி வந்தான்

**தேவி. கணேஸ்,**
**ஆனைப்பந்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

துணிச்சல் என்பது மனிதனுக்கு வெளியில் இருப்பதல்ல, அது அவனுக்குள்ளேயே இருப்பது.

– ஜோர்ஜ் எலியட்


# அதிகாரக் கதிரைகளை சூடாக்கும் சூட்சுமங்கள்

நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற எதிர்க்கட்சிகளின் பிடியிலிருந்து ஆளும் பெரமுனவாலும் அதன் பங்காளிக் கட்சிகளாலும் மீட்கப்பட்டு பத்திரமாகக் கரை சேர்க்கப்பட்டிருக்கின்றார் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல. சுகாதாரத்துறையில் அண்மைக்காலமாக மிகுந்திருக்கும் நெருக்கடிகள், ஊழல் குற்றச்சாட்டுகள், தரமற்ற மருந்துப்பயன்பாடுகள், நிலையற்ற மருத்துவம் உள்ளிட்ட சொல்லொணாத் துன்பங்களுக்குள் நின்று உழன்றுகொண்டிருந்த மக்களின் எதிர்பார்ப்புமீது விழுந்த சம்மட்டி அடியாகவே 'கெஹலியவைப் பத்திரப்படுத்திய' பெரமுனவினரதும் அவர்களின் சகாக்களின் தீர்மானம் அமைந்திருக்கின்றது. தவிர, இதை ஐக்கிய மக்கள் சக்தியுடையதோ அல்லது ஜே.வி.பியினதோ 'அரசியல் தோல்வியாகக்' கொள்ளுதல் தகாது. இன்னும் வெளிப்படையாகச் சொல்வதாயின், 'இதுதான் சுகாதாரத்துறை. இவ்வாறுதான் அது பயணப்படும்' என்ற செய்தியையே இந்தத் 'தீர்மானத் தகர்ப்பு' கட்டியம் செய்திருக்கின்றது.

கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தின்போது நாட்டின் அத்தனைதுறைகளும் வீழ்ச்சி கண்டன. பின்னடைவே இல்லாத துறைகளே இல்லை என்னும் அளவுக்கு நிலைமை தீவிரமானது. ஆனால், கோத்தாபய ராஜபக்ச பதவியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் 'இருந்ததைவிட ஓரளவு பரவாயில்லை' என்னும் அளவுக்கு சிலதுறைகள் மீட்சி கண்டிருக்கின்றன என்றால் அதை மறுப்பதற்கில்லை. விவசாயத்துறை, மின்சக்திதுறை, எரிசக்திதுறை, நீதித்துறை என்பன இவற்றுக்கு ஒருசில உதாரணங்கள். ஆனால், சுகாதாரத்துறையின் போக்கோ தலைகீழ். அந்தத் துறை நாளுக்குநாள் தேய்ந்துகொண்டுதான் செல்கின்றது. மருந்து இல்லாமையால் உயிரிழப்புக்கள்கூட பதிவாகும் அளவுக்கு மருத்துவப் பேரிடர் இலங்கை இறுக்கமாகக் கௌவியிருக்கின்றது. இதிலிருந்து மீள்வதற்கு ஓர் அமைச்சராக கெஹலிய எந்த முயற்சியையும் எடுத்ததாக இல்லை. மருந்துகளின் இருப்பை – மருத்துவத்துறையின் திட்டங்களை வெளிப்படுத்தும் ஓர் ஊடகப் பிரதிநிதிபோன்றுதான் அவர் தன் அமைச்சரவையில் காரியமாற்றிக் கொண்டிருக்கின்றார். இவ்வாறான ஆளுமையற்ற ஒருவரை, அரசியலுக்காக – ஆட்சிக்காக – அதிகாரத்துக்காக பாதுகாப்பதும், தக்கவைப்பதும் மக்களுக்குச் செய்யும் துரோகமே அன்றி இதில் இரண்டாம் விவாதமென்ற ஒன்று இல்லவேயில்லை.

உலகின் உச்சபட்ச ஜனநாயக அம்சங்கள் பொருந்திய நாடாக பிரிட்டன் அறியப்படுகின்றது. இந்த நாடு கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் திரேசா மே, போரிஸ் ஜோன்சன், லிஸ் ட்ரஸ், ரிஷி சுனக் என நான்கு பிரதமர்களைச் சந்தித்திருக்கின்றது, இதற்குக் காரணம் ஒன்றுதான். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டனை விலக்கிவைக்கும் 'பிரக்ஸிட்' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க மக்கள் தீர்ப்பை நடைமுறைப்படுத்த முடியாமையே. மக்களின் கட்டளையை நிறைவேற்ற முடியாத பட்சத்தில் அதிகாரக் கதிரைகளைக் கெட்டியாகப் பிடித்துச் சூடாக்குவதால் எந்தப் பயனுமில்லை. அவ்வாறான அதிகாரக் கதிரைகள் இருப்பதை விடவும் இல்லாதிருப்பது மேல் என்பதுதான் அவர்களின் 'பொதுப்புரிதல்'. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஜப்பானின் ரயில்வே அமைச்சர் ஜப்பானியர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார். ரயில்களின் பயண நேரத்தில் 'வெறும் நிமிடக் கணக்கில்' நேரப் பிழைகள் நேர்ந்ததை அவர் தன் தவறாக ஏற்றுக்கொண்டார். இதுதான் அதிகாரக் கதிரைகளுக்கான உச்சபட்ச அழகும், பின்பற்றவேண்டிய கட்டாயக் கலாசாரமும். ஒருவேளை, பிரிக்ஸிட் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் அந்தப் பிரதமர்கள் கதிரைகளைச் சூடாக்கியிருந்தால் அவர்களின் சொந்தக் கட்சிகளே அத்தகையவர்களுக்கு எதிராகத் திரும்பியிருக்கும். இதுவே இலங்கையாக இருந்திருந்தால்...?

மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேறுபாடு இது. இந்தக் குறைந்தபட்ச 'அதிகாரக் கலாசாரப் புரிதல்' என்று இந்தத் தீவின் அரசியலுக்குள் நுழைகின்றதோ அன்றுதான் கதிரைகளைச் சூடாக்கும் சூட்சுமங்கள் இலங்கை விட்டகலும்.




# இலங்கையின் சுபீட்சத்துக்கு ஜி.பி.எஸ். சலுகை அவசியம்

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை வேண்டுகோள்

**கொழும்பு, செப். 10**

**இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்தும் வழங்கின் பொருளாதார மீட்சி மற்றும் சுபீட்சம் எனும் நிலைமாற்றத்தை நோக்கி இலங்கை பயணிக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை வலியுறுத்தியுள்ளது.**

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதுவர் கிரேஸ் ஆசிர்வாதம் ஏற்பாடு செய்திருந்த விருந்துபசார நிகழ்வில் 'இலங்கையின் நண்பர்கள்' குழுவின் தலைவர் தோமஸ் டெகோவ்ஸ்கி மற்றும் பிரதித் தலைவர் மெக்ஸிமிலியன் ரா ஆகியோர் உள்ளடங்கலா ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இதன்போது நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை முன்னிறுத்தி முன்னெடுக்கப்படுபவை குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதுவர், ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையின் மூலம் நாட்டின் சமூகக் கட்டமைப்பில் நலிவுற்ற நிலையிலிருந்த துறைகள் மேம்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். அதற்கமைய ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி. எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து வழங்கி இலங்கைக்கு ஆதரவளிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

# கடன் சீரமைப்பு விவாதத்தில் சர்வதேச கடன் வழங்குநர்கள்

கொழும்பு, செப்.10

சர்வதேச கடன் வழங்குநர்கள் அடுத்த வாரம் கூடி இலங்கை போன்ற நாடுகளின் மறுசீரமைப்புத் திட்டங்களில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பையும் இணைப்பது தொடர்பில் விவாதிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு முக்கியமான தகவல்களை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஜி-20 நாடுகளின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் எதிர்வரும் 15 ஆம் திகதி இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை மொரோக்கோவில் நடைபெறும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கிக் கூட்டத்தில் மேலதிக விடயங்கள் தொடர்பாக ஆராயப்படும் எனத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இந்தநிலையில் அடுத்த வாரம் இடம்பெறவுள்ள கூட்டத்தில் உத்தியோகபூர்வ மற்றும் தனியார் கடன் வழங்குநர்கள், கடன் பெறும் நாடுகள் உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகளும் பங்கேற்பார்கள் என தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

நாளை 11.09.2023 திங்கட்கிழமை ஆவணி 25

சுபநேரம் : 12.03 – 01.33

ராகுகாலம் : 7.33 – 09.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லூரில்**
**காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு**

யாழ் நல்லூர் முத்திரைச்சந்திக்கு அருகாமையில் 1 1/2 பரப்புடன் நல்ல சூழலில் வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
**070 - 1700976**



**வேலையாட்கள் தேவை**

1). Receptionist
2). Graphic Designer
Part time / Full Time

**T.P:077 158 7186**

(CS 52042) A-1



# வேலைவாய்ப்பு

வடமாகாணத்தின் பிரசித்தி பெற்ற விற்பனை வலையமைப்பில் இணைந்து கொள்ள விரும்புகிறீர்களா?
உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

- விற்பனை பிரதிநிதி (Sales Rep)
- விற்பனை மேற்பார்வையாளர் (Sales Supervisor)
- பணம் பெற்றுக் கொள்பவர் (Cash Collector)

➡ முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது
➡ வயது எல்லை : 20 - 45
➡ சம்பள விபரம் நேரில் பேசி தகுதிகாண் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

நேரடியாக உங்களது சுயவிபரக் கோவையுடன் நாளை (11.09.2023) திங்கட்கிழமை (காலை 8.00 மணி தொடக்கம்) சமுகமளிக்கவும்.

**Vesta Food & Beverage Industries**
**வெஸ்ரா வூட் & வீவரேஜ் இன்டஸ்ரீஸ்**
குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

**021 222 3788**
**075 466 5555**

(CS 52043) A-1



## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
20 . 08 . 1936

மறைவு
11 . 08 . 2023

கடந்த (11.08.2023) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் பங்கசாம்பாள் பரமலிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.09.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக் கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்று இருந்தவேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும், பத்திரிகையூடாகவும், துண்டுப் பிரசுரங்கள், மலர் அஞ்சலிகள் மற்றும் சகல விதத்திலும் உதவிய உற்றார், உறவினர்கள், குடும்ப வைத்தியர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எம் குடும்பத்தோடு இணைந்து உதவிய அன்பு நெஞ்சங்களுக்கு எமது குடும்பத்தி னரின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இல. 160, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 7431**

**குடும்பத்தினர்**

(cs.52041) (N.1)



**2024ஆம் ஆண்டிற்கான அனுமதி - தரம் 1**

உடுவில் மகளிர் கல்லூரியில் தரம் 1 இற்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை
**11.09.2023 - 20.10.2023** காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளலாம்
**இடம் : உடுவில் மகளிர் கல்லூரி காரியாலயம்.**
**நேரம் : காலை 8.00 - மதியம் 2.30** மணிவரை

(cr.40538) N.1

**அதிபர்**



**உதவிக் கணக்காளர் தேவை**

கொழும்பு- 11 இல் இயங்கும் நிறுவனத்திற்கு பெண் உதவிக் கணக்காளர் தேவை. க.பொ.த. உயர்தரத்தில் வணிகக்கல்வி தேர்ச்சி பெற்றவரும், ஆங்கில அறிவு, கணக்கியல், இறக்குமதி, VAT Tax, இதர Tax சம்பந்தமாகவும் 2 வருட அனுபவம் உள்ளவராகவும் இருக்க வேண்டும். வேலை நேரம் கிழமை
நாட்கள் - 9 - 5.30 வரை
சனிக்கிழமை - 1.30 மணி

சம்பளம் 40 000/- அத்துடன் இதர கொடுப்பனவும், மேலதிக வேலை நேரத்திற்கு OT, ETF, EPF உண்டு.
சுயவிபரக் கோவையை கீழ்வரும் இலக்கத்திற்கு Whatsapp செய்யவும்.

**077 613 3168**

(cs 52026) N.1



**JOB VACANCY**
**Suganth Seafood (Pvt) Ltd, Jaffna**

**கணக்காளர் (ஆண்)**

**தேவையான தகுதிகள் மற்றும் அனுபவம்:**

✔ ICASL/CIMA தேர்வுகளில் பகுதி / முழு அல்லது AAT தேர்வுகளில் முழுமையாக தகுதி பெற்றிருக்க வேண்டும்.
✔ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணக்கியல் அல்லது நிதியியலில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
✔ Accounting Software இல் பணிபுரியும் திறன் மற்றும், Microsoft Excel இல் சிறப்பு தேர்ச்சி.
✔ நிதி அல்லது கணக்கியல் துறையில் குறைந்தபட்சம் 5 - 10 ஆண்டுகள் அனுபவம்.
✔ ஆங்கிலத்தில் நல்லறிவும், சிங்களம் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
✔ 45 வயதுக்கு கீழ் உள்ளவராக இருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை:**
தொடர்பு விவரங்களுடன் உங்கள் CV ஐ info@suganth.lk இற்கு அனுப்பவும். நீங்கள் விண்ணப்பித்த Position ஐ மின்னஞ்சலில் குறிப்பிடவும்.

(CS/52013)AH-1



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
25 . 05 . 1945

உதிர்வு
23 . 08 . 2022

**அமரர் சுப்பிரமணியம் தயானந்தன்**

**திதி: அபரபக்க ஏகாதசி (10.09.2023)**

அன்பும் பண்பும் எமக்களித்து வளர்த்த
எங்கள் அப்பாவே ! உமையிழந்து
ஏங்கித் தவிர்க்கின்றோம் - எங்கும்
எதிலும் துணையாய் நிற்பீர் !

என்றும் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

(cs.52034) (N.1)


# நயினை நல்லூர் யாத்திரை ஆரம்பம்

யாழ், செப்.10
நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் நடைபெற்று வரும் நயினை- நல்லூர்த் திருத்தலப் பஜனை பாத யாத்திரை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது. இந்தப் பாதயாத்திரை குறிகாட்டுவான், புங்குடுதீவு, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ்ப்பாணம், வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக எதிர்வரும் 13ஆம் திகதி தேர்த்திருவிழாவன்று நல்லூரான் திருத்தலத்தைச் சென்றடையும். திருத்தேரின் பின் பஜனை வேல் அர்ச்சனையுடன் யாத்திரை நிறைவுறும். (ச)

## குருதிக் கொடை

யாழ், செப்.10
உடுவில் மத்திய விளையாட்டுக் கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுக் குருதிக் கொடை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் உடுவில் டச்சு வீதியில் அமைந்துள்ள வசி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 'சுவாபிமானி' தேசிய விருது; யாழ்ப்பாணம் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், செப். 10

'சுவாபிமானி' தேசிய விருதுக்கான அகில இலங்கை ரீதியில் சிறந்த பிரதேச மட்ட உத்தியோகத்தர்களுக்கான போட்டியில் யாழ்.மாவட்டம் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் சமூக சேவைகள் திணைக்களத்தால் இந்தப் போட்டி கடந்த மாதம் களுத்துறை மாவட்டச் செயலகத்தில் நடத்தப்பட்டது.

இதில் யாழ். நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தரான திருமதி ரஜீவன் தர்மினி 3ஆம் இடத்தைப் பெற்று மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார் என யாழ். மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (ச-இ)


# உதயன் அனுசரணையில் இலவச மருத்துவ முகாம்!

யாழ்ப்பாணம், செப்.10

உதயன் பத்திரிகை மற்றும் உதயவாழ்வு அறக்கட்டளை இணைந்து சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. நீரிழிவு, உயர் குருதியமுக்கம், கொலஸ்ரோல், கண், பல் பரிசோதனை என்பன மேற்கொள்ளப்பட்டு மருத்துவ ஆலோசனைகளும், மேலதிக சிகிச்சைகளுக்கான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.



சங்கானைப் பிரதேச மருத்துவமனையின் மாவட்ட மருத்துவ அதிகாரி காயத்திரி தனஞ்சயன், சங்கானைப் பிரதேச மருத்துவமனை பல் மருத்துவ நிபுணர் அம்பலவாணர் இந்திரகுமார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உமாசுதன், சங்கானைப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், தொல்புரம் ஆரம்ப மருத்துவப் பிரிவு உத்தியோகத்தர், உதயன் குழுமத் தலைவர் ஈ.சரவணபவன், கலைமகள் சனசமூக நிலையத்தினர், சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-125)



## மூத்த பொலிஸ் அத்தியட்சகர் குணரத்னவுக்கு கௌரவிப்பு

கிளிநொச்சி, செப்.10

கிளிநொச்சி மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குணரத்னவுக்கு கௌரவிப்பு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இவர் பொலிஸ் சேவையில் இணைந்து 38 வருடங்களாகத் தன்னை முழுமையாக நாட்டு மக்களின் பாதுகாப்புக் கடமையில் அர்ப்பணித்து பல குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் பிரதானியாக கடமைபுரிந்து வந்த நிலையில் தனது கடமையிலிருந்து ஓய்வுபெறவுள்ளார்.

இந்த நிகழ்வில், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளை அதிகாரி , கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பொலிஸ் மா அதிபர் மற்றும் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர், இராணுவத்தினர் என பலரும் கலந்துகொண்டனர். (ஒ-ரி3-27)




## திருக்குறள் போட்டியில் வென்றோருக்குப் பரிசு

மன்னார், செப்.10

மன்னாரில் மணி மாஸ்ரர் விருதுக்கான திருக்குறள் போட்டி பரிசளிப்பு விழாவில் 41 மாணவர்களுக்கு பத்து லட்சம் ரூபா பணமும் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந்த நிதியானது மணி மாஸ்ரரின் ஓய்வூதியப் பணத்தில் 5 இலட்சம் ரூபாவும், மிகுதிப் பணத்தை அவரின் குடும்பத்தின் நான்கு பிள்ளைகள் இணைந்து பங்களிப்புச் செலுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களிலுள்ள மாணவர்கள் மத்தியில் போட்டிகள் 4 பிரிவுகளாக நடத்தப்பட்டன.

முதலாம் பிரிவு முதலாம் ஆண்டு மாணவர்களில் வெற்றியாளர்கள் மூவருக்குத் தலா 15 ஆயிரம் ரூபாவும், அதில் பங்குபற்றிய ஏழு பேருக்குத் தலா 7 ஆயிரத்து 500 ரூபாவும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு வங்கிப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

மணி மாஸ்ரர் விருதுக்கான திருக்குறள் போட்டியில் ஏனைய மூன்று பிரிவுகளிலும் வெற்றியீட்டிய முதல் மூன்று பேருக்குத் தலா 50 ஆயிரம் , 30 ஆயிரம், 20 ஆயிரம் ரூபா வீதம் பணத்தொகையும், பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந்த மூன்று பிரிவுகளிலுமுள்ள தலா 7 பேர் கொண்ட 21 மாணவர்களுக்குத் தலா 7 ஆயிரத்து 500 ரூபா வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட புத்தகங்களும், 7 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. (எ-60)



## பனையைப் பாதுகாக்க நிபுணத்துவக் குழு

யாழ்ப்பாணம், செப்.10

பனைகள், பனைக்கூடல்களைப் பாதுகாத்தல் மற்றும் பனை மரங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு நிபுணத்துவம், சார்ந்த குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்றுமுன்தினம் பனை அபிவிருத்திச் சபையில் நடைபெற்றது.


இந்தக் குழுவில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பல்வேறு திணைக்களங்களின் தலைவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். (எ-27)

## உரம் வழங்கல் தொடர்பில் கிளிநொச்சியில் கூட்டம்

கொழும்பு, செப்.10

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போகத்துக்கான உரவிநியோகத்தை விரைவுபடுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், பெரும்போகத்தில் 28 ஆயிரத்து 415 ஹெக்ரேயரில் மேற்கொள்ளப்படவுள்ள நெற்செய்கைக்கு உரிய காலத்தில் உரவிநியோகத்தைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. (எ-113)



ஒழுங்கற்ற வரவுடைய மாணவர்களைத் தொடர் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுத்தும் நடவடிக்கை பிரான்பற்றுக் கலைமகள் வித்தியாசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பகுதிக் கிராம உத்தியோகத்தர், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுவர் மற்றும் பெண்கள் உத்தியோகத்தர்கள், வீலய மட்ட உத்தியோகத்தர்கள், மாணவர்களின் பெற்றோர் பங்குபற்றினர். (எ-66)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவு

## அமரர் கிட்டிணன் பரஞ்சோதி

(ஆண் தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)

திதி : துவாதசி



பிறப்பு 16.02.1943

இறப்பு 03.09.2021

அன்பின் திருவுருவே
எங்கள் பாசத்தின் உறைவிடமே
எத்தனை காலங்கள் போனாலும்
மறப்போமா உங்களை
எங்கள் மனதில் குடிகொண்ட தெய்வமே
உங்கள் அன்பு உருவம் என்றும் மாறாது
எம் இதயத்தில் உங்கள் நினைவுகளை
சுமந்து வாழ்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
சாந்தி! சாந்தி ! சாந்தி!

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
இக்கிராளை
கந்தரோடை, சுன்னாகம்.

(cs 51914) (N-J)

# Sharmila Travels

மேற்படி எமது நிறுவனத்தில்
பின்வரும் வெற்றிடங்களிற்கு ஆட்கள் தேவை.

- Ticketing Staff
- Cashier

தகைமை:
G.C.E A L சித்தி அடைந்திருப்பதுடன் கணினி மற்றும் ஆங்கில அறிவு உடைய வர்கள் விண்ணப்பிக்கலாம்
Ticketing அனுபவமுள்ள பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி:
pettah@sharmilatravels.com

தொடர்புகளுக்கு:
285 - 287 Stanley Road, Jaffna
T.P.: 021 222 0267 Mob: 077 788 1656

(cs 26164) (N-1)

# மரண அறிவித்தல்



## இராசையா மகாதேவன்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கு முடமாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மகாதேவன் கடந்த (07.09. 2023) வியாழக்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா லச்சுமி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற திருமேனி மற்றும் விமலா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சின்னையா சௌபாக்கியவதி தம்பதியரின் மருமகனும், கலைஞானசொரூபி (வசந்தா) அவர்களின் அன்புக் கணவரும், ஸ்கந்தரூபன் (சுவிஸ்), மயூரன் (பிரான்ஸ்), மகிபன், பரணிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகி (சுவிஸ்), சிவகௌரி (பிரான்ஸ்), கோபிநாத் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், ஹரிஜித், டெலுக்ஷன், வர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.42/1, இராமலிங்கம் வீதி, முடமாவடி கெனடிலேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
021 205 4207

(cs 52020) (N-1)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1995 இல் பிறந்த பூரட்டாதி 4ம் பாதம், ஆசிரியை மணமகளுக்கு அரசதொழில் அல்லது வெளிநாட்டு மணமகன் தேவை.

077 897 6406 - தாவடி

## Spoken English - Grammar

யாழ். நகரில் விரைவாக 6 மாதத்தில் English பேச, எழுத விரும்பும் சகலரும், பல்கலை மாணவர், O/L A/L மாணவர், தொழில் புரிவோர்,

Ganesh BA
077 766 8725

## காணி விற்பனைக்கு

நல்லூர் அருகே செம்மணி வீதியில் ஒன்றாக வேலியிடப்பட்ட இரண்டு 1 பரப்பு காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
விலை - பரப்பு 10 லட்சம்

தொடர்பு: 077 779 1929
076 669 8085

(CS 26156) AH-1

## வீடு வாடகைக்குத் தேவை

நிறுவனம் ஒன்றின் இயக்குநர் ஒருவரின் குடும்பத்துக்கு யாழ்நகருக்கு அண்மையாக சகல வசதிகளுடன் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

074 111 3822

## காணி விற்பனைக்கு

சுதுமலை இறையில் அமைந்துள்ள நிலப்பரப்பு 04 குளி 08 விஸ்தீரணம் கொண்ட நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

077 869 4931

## காணி விற்பனைக்கு

நீர்வேலி, இறை மாசுவன் சந்தியில் அமைந்துள்ள 2 குளி, 5.874 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

077 647 2003,
0033 774 898 048

(CS 51937) AH-1

## வீடு வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையில் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

077 306 8993

## காணி விற்பனைக்கு

கொக்குவில் சம்பியன் வீதியில் 2 பரப்பும், கருவேற்புலம் வீதியில் 2 பரப்பும் விற்பனைக்கு.

077 601 1135

(CS 51731) AH-1


## வாடகைக்கு உண்டு

பழைய நம்பர் 179, சிவன் பண்ணை வீதியில் 3 ஸ்ரோர்ஸ் (40 x 12), 2 கடை (30 x 15) அபி கொலிடே விழாக்கு முன்பாக வாடகைக்கு உண்டு.
(CCTV கமரா உள்ளது.)

தொடர்பு: 077 863 1768

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 • 02 • 1943



மறைவு 05 • 09 • 2023

## திருமதி நாகராசா புவனேஸ்வரி

யாழ். புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகராசா புவனேஸ்வரி கடந்த (05.09.2023) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- கமலம் தம்பதிகளின் அன்பு மகளும், செல்லப்பா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரன், லீலாவதி, பாலச்சந்திரன் மற்றும் ஜெயகுமார் (சின்னத்தம்பி), ஆகியோரின் சகோதரியும், குகேந்திரன், ரவீந்திரன், விஜிதா, வனஜா, சுரேந்திரன், கிரிஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுதாரஜேஸ்வரி, சத்தியானந்தன், அன்ரன் மிராண்டா, நிரஞ்சினி, முகுந்தன், ஆகியோரின் அன்பு மாமியாரும், திருநாவுக்கரசு, இந்திரா, காலஞ்சென்ற செல்வாம்பிகை மற்றும் யோகரட்ணம், கந்தையா சரஸ்வதி , தம்பிராசா - சரஸ்வதி, தேவராசா - சண்பகாவதி ஆகியோரின் மைத்துனியும், சுதர்ஷன் - டில்றுக்ஷி, சரணிகா, சாம்பவி, டிலோஜன், ஹரிணி, சரணியா, மிதுனன், ஜெனுஷன், ஜெஸ்மிதா - அஜய், ஜெய்ஷான்,கவினா, கானவி, விஹாணா, யாகுலன் (கவின்) மதுஷன்,அபிஷேக், டிலக்சன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அபிலேஷ், பவிலேஷ், பவிஷ்னா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2023) திங்கட்கிழமை மு. ப. 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

புளியங்கூடல் ஊர்காவற்றுறை.
076 435 7323

தகவல்:
குடும்பத்தினர்

(cs 44723) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில்

## பயிற்சியுடன் கூடிய உடனடி வேலைவாய்ப்புகள்



காபென்டர்ஸ்
CARPENTERS



ப்ளம்பர்ஸ்
PLUMBERS



இலக்ரீஸியன்ஸ்
ELECTRICIANS

- கல்வித் தகமைகள் தேவையில்லை / IELTS தேவையில்லை.
- அங்கீகரிக்கப்பட்ட தொழில்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ் முக்கியமானது.
- சேவைச் சான்றிதழ்கள் மிக முக்கியமானது.
- கனடாவில் 4 மாத கால பயிற்சி வழங்கப்படும் / பயிற்சிக்குப் பின் நிரந்தர வேலைவாய்ப்பு.
- 40 வயதிற்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்பதாரருடன் மனைவி மற்றும் பிள்ளைகளும் கனடாவிற்கு செல்லலாம்.

உங்களது Cv மற்றும் சான்றிதழ்களை **info@academiclanka.com** மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

இலங்கையில் நாங்கள் எந்த ஒரு முகவரையும் அல்லது பிரதிநிதியையும் நியமிக்கவில்லை என்பதை கவனத்திற் கொள்ளவும்.

இலங்கையில் ஒரே பிரதிநிதி

மேலதிக தகவல்களுக்கு அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

தகவல்களை தமிழ் மொழி மூலமாக பெற்றுக்கொள்ள

**0117 688 072**

தகவல்களை ஆங்கிலம் மற்றும் சிங்களம் மொழி மூலமாக பெற்றுக்கொள்ள

**0117 688 071**

**Consolidated Academic Lanka (Private) Limited**

No.22-B, Station Lane, Nugegoda - 10250, Sri Lanka.

ceo@academiclanka.com / info@academiclanka.com

www.academiclanka.lk

---

JAFFNA HOUSING & CONSTRUCTION EXHIBITION 2023

# யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான கண்காட்சி 2023

**15 16 17**

## செப்டம்பர்

**முற்றவெளி மைதானத்தில்**

காலை 10.00மணிமுதல் மாலை 8.00 மணிவரை



வீட்டு தளபாடங்கள், சமையலறை உபகரணங்கள், குளியலறை சாதனங்கள், பெயி-ன்ட் வகைகள், வீட்டுக்கூறைகள் மற்றும் கட்டிட நிர்மாணம், தொடர்பான அனைத்து விடயங்களும் ஒரே கூரையின் கீழ்.







நிர்மாண துறையில் உங்களது சேவைகளையும் உற்பத்திகளையும் விளம்பரப்படுத்தி கொள்வதற்கு இப்பொழுதே அழையுங்கள்.

**MINHAJ 077 888 2700**

Official Sponsor: Hayleys Aventura Innovative Solutions

Radio Partner: 103.6 103.4

In Association: Chamber of Construction Industry of Sri Lanka

Organizer: Iyngaran Media Solution (Pvt) Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MOBILE



ONE SHOT
யார் என்ன சொன்னாலும்
ரியலான UNLIMITED பெக்கேஜ்

*NONSTOP + எந்த வலையமைப்பிற்கும் UNLIMITED CALLS & SMS
+
30 GB மேலதிக டேட்டா 30 நாட்களுக்கு ரூ. 989/-
+
7 GB மேலதிக டேட்டா 7 நாட்களுக்கு ரூ. 289/-

SELFCARE APP DOWNLOAD செய்யுங்கள்
குறித்த தொகையை ரீலோட் செய்யுங்கள்
#170# அழையுங்கள்
முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு

SLTMOBITEL





# Just Finished your A/ L 'S......!

## வட மாகாணத்தில் முதன்முறையாக TVEC அங்கீகாரம் பெற்ற தாதியர் கல்வி நிறுவனம்

# Institute of Medical Sciences

## உயர் தேசிய டிப்ளோமா தாதியர் கற்கைநெறி - NVQ 6
## (Higher National Diploma in Nursing - NVQ 6)

- A/L எந்தவொரு பிரிவிலும் 03 பாடங்கள் சித்தி பெற்றவராயின் - NVQ - 6 கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்
  - கற்கைநெறிக் காலம் - 03 வருடங்கள்
  - விண்ணப்ப முடிவுத்திகதி - 10.10.2023
- O/L சித்தி பெற்றவராயின் - Nurse Assistant NVQ - 04 கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்
  - கற்கைநெறி காலம் - 18 மாதங்கள்

மேலதிக தொடர்புகளுக்கு:

076 016 3515 (Whatsapp)
021 225 6335
M-theimsjaffna@gmail.com
www.imslanka. lK





Apply Now



# வேலைவாய்ப்பு

சுன்னாகத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்துக்கு
(Computer Billing)
செய்யக்கூடியவர்கள் / பழக விரும்புபவர்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

ஆண்கள் மட்டும்

தகைமை:
அடிப்படைக் கணினி அறிவு அவசியம்
வயதெல்லை : 20 - 30 வயது வரை

076 540 4630



## வேலையாள் தேவை

வவுனியா நகரத்தில் தாய் இல்லாத சிறுபெண் தனது சொந்த கடை நடத்துகின்றார். அவருக்கு உதவியாக பெண் ஊழியர் தேவை. (CS 25807)(K-1)

தொடர்பு : 070 484 5366



## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை முதலாம் கட்டையிலிருந்து 300m தூரத்தில் Water Board Tank இற்கு மிக அருகாமையில் 3 1/4 பரப்புடைய சகல வசதியுடன் வீடும், நிலமும் விற்பனைக்கு உண்டு. (CS 24741)(K-1)

தொடர்பு : 076103 3150



## அறை வாடகைக்கு

வெள்ளவத்தையில் மிக பாதுகாப்பான சூழலில்
A/C, Non A/C Rooms
நாளாந்த வாடகைக்கு உண்டு.
(தனி வீடாகவும் பெறலாம்)

தொடர்புகளுக்கு
0762912431



## வீடு தேவை

கல்வியங்காடு, இருபாலை, கட்டைப்பிராய், கோப்பாய், நீர்வேலி ஆகிய பிரதேசங்களில் வீடு விலைக்குத் தேவை. விற்க விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.
(தரகர் தேவையில்லை)
(1பரப்புக்குட்பட்ட வீட்டுடன் காணி தேவை)

077 657 7365



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பான்சிக் கடைகளுக்கு வேலையாட்கள் (பெண்கள்) தேவை.

சம்பளம் - 25,000 - 30,000

இல.55, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம் (தனியார் பேருந்து நிலையத்துக்கு அருகில்)

இல.1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (அரச பேருந்து நிலையத்துக்கு அருகில்)

074 129 7447, 077 153 6914

(CS51984AH-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.தாக்குதலில் 49 பேர் சாவு

மாலியின் வடகிழக்கில் படகொன்றில் பயணித்த பொது மக்கள் மீது மேற் கொள்ளப்பட்ட தாக் குதலில் 49 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஐ. எஸ். அமைப்பினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அதேநேரம், ஐ.எஸ். அமைப்பினர் இராணுவ முகாமொன்றின் மீதும் தாக்குதலை மேற் கொண்டதில் 15 மாலி இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். (ஏ-இ)


**வாகன சாரதி தேவை**

கனரக வாகனம் செலுத்தக் கூடிய சாரதி பருத்தித்துறை நீர்வேலியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு தேவை.

021 223 0235
0777 890 398

**காணி விற்பனைக்கு**

தாவடி 192ᵈ இலக்க கிராமசேவையாளர் அலுவலகத்திற்கு அருகாமையில் 100m தூரத்தில் இரண்டு, இரண்டு பரப்புகளாக பிரிக்கப்பட்ட இரண்டு காணித்துண்டுகள் உள்ளது. கொள்முதல் செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். யாழ். நகரில் இருந்து 1km மற்றும் K.K.S வீதியிலிருந்து 500m தூரத்தில் அமைந்துள்ளது.

077 220 8432, 077 390 2994

**காணி, வீடு விற்பனைக்கு உண்டு**

நீர்வேலி கரந்தன் பகுதியில் 3 பரப்பாகப் பிரிக்கப்பட்ட 8 துண்டு வடக்கு வாசல் வீடு கட்டக்கூடிய காணிகள் விற்பனைக்குண்டு.
நீர்வேலி பகுதியில் இராசவீதி பாதையில் 500m தூரத்தில் 4 பரப்புக் காணியில் வீடு விற்பனைக்கு உண்டு.

076 796 0056, 021 205 4511

**Hotel விற்பனைக்கு**

வடமராச்சியில் பிரபல Hotel கல்யாண மண்டபத்துடன் உடனடி விற்பனைக்கு உண்டு.

தரகர் வேண்டாம் 077 522 2613

**கணித வகுப்பு**

தரம் - 10, 11, (O/L) Repeat மாணவர்களுக்கு **கணிதம்** தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

071 379 5583

**வேலையாள் தேவை**

நல்லூர் உற்சவகால தற்காலிக பாணிபூரி கடைக்கு தொடர்ந்து வேலை செய்வதற்கு ஆண், பெண் வேலையாளர்கள் தேவை. தொடர்ந்து பணியாற்றலாம்.

076 037 4643, 077 292 3749

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரியில் பரப்பு காணி தபால் கந்தோர் அருகாமையில் உடனடி விற்பனைக்கு உண்டு.

தரகர் வேண்டாம் 076 05 89 822

**வேலையாட்கள் தேவை**

அலுவலகம் ஒன்றிற்கு ஆண் / பெண் இருபாலாரும் தேவை.
(CS 52038) (K-1)

தொடர்பு 077 408 8241

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி இராச வீதியிலிருந்து 100 M தூரத்திற்குள் அரசகேசரிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 622 4206

**இலவச Taxi Meter**

நீங்கள் உங்கள் வாகனங்களுக்கு PickMe Taxi meter இல் இணைக்க அழைக்கவும். (முச்சக்கர வண்டி / CAR/ VAN / மோட்டார் சைக்கிள்)

077 473 7737

**இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்**

**பிரிவு 49**

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singalam
- Diploma in Psychology & Counselling
- Diploma in Business Management
- Diploma in Project Management
- Diploma in Care Giver
- Diploma in Nursing
- Diploma in Hotel Management


காலம் : 3 மாதங்கள்
பெறுமதிமிக்க சான்றிதழ்

ஆரம்பம்
09.09.2023,
10.00 AM

**Free Consultancy Service:**
UK, Canada, Australia
போன்ற நாடுகளுக்கான VISA ஆலோசனைகள் எமது சட்டத்தரணிகளால் இலவசமாக வழங்கப்படும்.

IPS Thirunelvely, Jaffna.
T.P:- 021 434 0229
076 685 2529


## மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 08 . 1942 — மறைவு 08 . 09 . 2023

### ஆறுமுகம் சந்திரபோஸ்

ஏழாலையை பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்டவரான ஆறுமுகம் சந்திரபோஸ் கடந்த (08.09.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் நாகம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற அம்பிகாவதி மற்றும் ஞானதேவி, ஞானசோதி, ஞானமலர், சத்தியலோகன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் பாலரஞ்சிதம், பாலசந்திரன், பாலதர்சினி, பாலாஜினி காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத்தந்தையும் நீலமோகநாதன், சங்கீதா, தியாகராசா, மனோகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் டினோஜன், சஞ்சய், கயலிசை, வாதுசா, நேருஜா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (கோப்பாய்) நடைபெற்று பூதவுடல் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
077 8492 068
077 2931 757

CS 26184 M-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 12 . 1941 — மறைவு 06 . 09 . 2023

### குட்டித்தம்பி பாலச்சந்திரன்

சென்றான்ஸ் ஒழுங்கை, சுதுமலை, மானிப்பாயை வதிவிடமாக கொண்ட குட்டித்தம்பி பாலச்சந்திரன் அவர்கள் 06.09.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டித்தம்பி - தில்லையம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, பேரம்பலம், பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும், ராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் சிறிதரன், சகிலதரன், சற்குணம், வித்தியரூபன், பிரியா ஆகியோரின் அன்புத்தந்தையும் சுகுமார், கீதாஞ்சலி ஆகியோரின் சிறிய தந்தையும் லக்சலா, லுக்சியா, யுலக்சலா, நியூசிலா, யதுசலன், சுஜீவன், திவ்யா, ரம்யா, ஐஸ்வர்யா, ஆர்த்திகன், ஓவியா, சேயோன், ஜீவன், தீபசாயினி, பிரேமப்பிரியன், ஆதவன் ஆகியோரின் அன்புப்பேரனும் தர்சினி, இந்திரவதனி, சிந்து, சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுர்சன், சுஜானி, கஸ்மிகன், சித்தார்த், சமீரா ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானம் அருகாமையில் இன்பம் அந்தியகால சேவை, ஓட்டுமடத்தில் நடக்கவிருக்கிறது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகபூசணி லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல் : குடும்பத்தினர்

CS 26185 M-1

## 31ஆம் நாள் நினைவுதின அழைப்பும் நன்றி நவில்லும்



கடந்த (11.08.2023) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர்

### திருமதி ஞானாம்பிகை இராசதுரை

அவர்களின் மறைவுத் துயரினை எம்மோடு பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில்...

புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் கண்டியைச் சேர்ந்த கருணாதிலக்க (வயது - 55) என்பவரே உயிரிழந்துள்ளார்.
ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ- 9 வீதி விளக்கு வைத்தகுளத்தில் இந்த விபத்து நடைபெற்றுள்ளது.
யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி வந்த கப் ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வவுனியா விலிருந்து புளியங்குளம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் அதிகாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (அ-ஓ.18,110)

## ஜனாதிபதி....

சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
'பிரதமர் பதவியையோ, அமைச்சர் பதவியையோ பெறவேண்டும் என்ற ஆசை இல்லை. அரசியல் கட்சிகளில் பிளவுகள் ஏற்படுவது சகஜம், அவை இன்று இருக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் பொதுவானவை' என்று மைத்திரி குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ-இ)

## காணிகளை...

பதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.
கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-
காணி அதிகாரம் வழங்கினால் வடக்கு- கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் காணிகளை பலவந்தமாகப் பிடித்துக்கொள்ளலாம் என்ற கருத்து பரப்பப்பட்டுவருகின்றது. இது தவறு. வடக்கு- கிழக்கில் வாழும் மக்கள் காணிபிடிக்கவில்லை. அவர்களின் காணி பிடிக்கப்பட்டுதான் சிங்களக் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனை நான் சொல்வதால் என்னை கெட்டவார்த்தையில் யாரேனும் திட்டலாம். ஆனால், இதுதான் உண்மை.
கல்லோயாதிட்டம், வெலிஓயாதிட்டம் என்பவற்றுக்கான காணி வடக்கு மக்களுக்குரியது, அங்கு பலவந்தமாக இராணுவத்தின் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.
சிலவேளை காணி அதிகாரத்தை வழங்கினால் அரச காணிகள் பறிபோகலாம் என்ற ஐயப்பாடு சிலருக்கு உள்ளது. அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம், மாகாண அரசுடன் பேச்சு நடத்தி, அபிவிருத்திக்காக மத்திய அரசு தேவையான காணியைப் பெறலாம். தனிநபர்களுக்கு காணி வழங்குவதாக இருந்தால் அதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்குத்தான் உள்ளது. மாறாக மாகாணசபைகளுக்கு அல்ல - என்றார். (அ-ஓ-44)

# அதிர்ந்தது மொராக்கோ பல நூறு பேர் மரணம்!

லண்டன், செப்.10

மொராக்கோவில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட பூமியதிர்வால் 300க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஒரு நூற்றாண்டு காலப்பகுதியில் மொராக்கோவில் ஏற்பட்ட மிகப் பெரும் பூமியதிர்வு இதுவெனத் தெரிவிக்கப்படுகின்றது.
நள்ளிரவில் மொராக்கோவின் உயரமான அட்லஸ் மலைப் பகுதியில் 6.8 ரிக்டர் அளவில் பூமியதிர்வு ஏற்பட்டுள்ளது. அதில் மராகெச் என்ற நகரமே மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 300 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர், 156 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சேதமடைந்த கட்டடங்களையும், மக்கள் அச்சத்துடன் வீதிகளுக்கு தப்பியோடுவதையும் சிலர் புகைமண்டலத்துக்கு நடுவில் காணப்படுவதையும் காண்பிக்கும் படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன. (ஏ-இ)





# வடகொரியாவின் புதிய நீர்மூழ்கி!

பியாங்யாங், செப்.10
வடகொரியா புதிய அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை உருவாக்கியுள்ளது. அதை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் கலந்துகொண்டுள்ளார்.
வடகொரிய ஜனாதிபதி கடற்படை அதிகாரிகளுடன் பெரிய நீர்மூழ்கிக்கு அருகில் பார்வையிடும் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ஏ-இ)


**வேலையாள்கள் தேவை**

உதிரிப்பாக விற்பனை முகவர் நிலையத்திற்கு கணக்காளர், விற்பனையாளர், விற்பனை பிரதிநிதி (ஆண் / பெண்) தேவை.

**070 659 0123**

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் கோப்பாய் வலிகாமம் கிழக்கு உப பிரதேச சபைக்கு அருகாமையில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை) (விலை பேசித் தீர்மானிக்கப்படும்)

**T.P:077 801 4335** (CS 52061)A-1

**வேலைக்கு ஆள் தேவை (பெண்)**

தனியார் நிறுவனம் ஒன்றின் கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள சிற்றுண்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு நன்கு முன் அனுபவமுள்ள பெண் மேற்பார்வையாளர் தேவை. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளமுடியும். (CS 52039)(K-1)

**074 123 5110**


# ஜி-20 தலைவர்களுக்கு தங்கத் தட்டில் உணவு!

புதுடில்லி, செப்.10
ஜி-20 உச்சிமாநாட்டில் பங்கேற்கும் உலகத் தலைவர்களுக்குப் பரிமாற, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்களால் விரும்பி உண்ணப்படும் பாரம்பரிய உணவுகளை நட்சத்திர உணவகங்கள் தயாரித்துள்ளன. மாநாட்டில் பங்கேற்கும் வெளிநாட்டுத் தலைவர்களுக்குத் தங்கம், வெள்ளித்தட்டில் உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தியாவின் புதுடில்லியில் ஜி-20 மாநாடு நடைபெற்று வருகின்றது. அதில் பல உலகத் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். அவர்களுக்கு இந்தியப் பாரம்பரிய உணவுகள், பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பாத்திரங்களில் உணவு பரிமாறப்பட்டு வருகிறது.
இதற்காக புதுடில்லியில் உள்ள தாஜ் பேலஸ் ஹோட்டலில் உள்ள 120 சமையல் கலைநிபுணர்கள், நாடு முழுவதும் மிகச் சுவையான 500 உணவுகளைத் தேர்வு செய்து, ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்க வரும் விருந்தினர்களுக்கு விருந்து படைத்து வருகின்றனர். கடந்த மூன்று மாதங்களாக இந்தக் குழுவினர் பல்வேறு உணவுகளையும் செய்து பார்த்து சுவை மற்றும் ருசியைக் கூட்டி தொடர்ந்து அதை மெருகேற்றும் பணிகளை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ-இ)


**கொழும்பு விலையில்**

**யாழ். நகரில் கோழிகள் விற்பனைக்கு உண்டு.**

புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ், ஊர்க் கோழி, சேவல், விறாத்துக் குஞ்சுகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.முட்டைகள் அனைத்தும் ஒரே இடத்தில்.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
(சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்)
1 Kg புறொயிலர் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1250/-
24 மணிநேர சேவை (இரவு பகல்)

தொடர்பு: நியு சிற்றி பாம்
நியு சிற்றி கோழிக்கடை
இல.08, சின்னக்கடை மார்க்கெட், குருநகர். யாழ்ப்பாணம். (CS 51999)A-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பணிநிலை வெற்றிடம்

யாழ்நகரில் இயங்கிவரும் பிரபல பாமசி (மருந்தகம்) ஒன்றிற்கு கீழ்காணும் வேலைகளுக்கு பணியாளர்கள் தேவை.

1. முகாமையாளர் (Manager) ஆண் - வயது 35+ முன் அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது
2. காசாளர் (Cashier) பெண்
3. வரவேற்பாளர்கள் (பெண்)

தொடர்பு: 076 976 7447
021 222 6069

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், நல்லூர், மருதடி லேனில் அமைந்துள்ள நிலப்பரப்பு 02 விஸ்தீரண முடைய காணியும் அதிலமைந்துள்ள வீடும் விற்பனைக்குண்டு.

077 430 6616, 074 081 3393

## வேலையாள்கள் தேவை

1. Light Vehicle (Auto,Bike) License உள்ள வேலையாள் தேவை.
2. புடைவை விற்பனை நிலையத்திற்கு ஆண் வேலையாள்கள் தேவை

JAFFNA EGG CENTER

077 851 1265, 075 258 9665

## விற்பனைக்கு

DIO BI Number மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. விலை 580,000. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

Serious buyers only.

077 628 0685

## காணி விற்பனைக்கு

தாவடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 255 0807

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 1 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

077 781 3417

## வேலையாட்கள் தேவை

கையடக்க தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு நற்பண்புள்ள விற்பனையாளர், காசாளர், திருத்துனர் தேவை

(CS 52040) (K-1)

தொடர்பு 077 795 6545

## அறை வாடகைக்கு

வெள்ளவத்தையில் தனிப் பாதையுடன் Apartment இல் அறை வாடகைக்கு உண்டு. மாத வாடகை 30000.00 Electricity & Water bill அடங்கலாக.

குசினி, Parking வசதி இல்லை.

T.P:070 178 8354

(CR 40546) A-1

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1989 ஆம் ஆண்டு, பரணி நட்சத்திரம். கிரகபாவம் 22. செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில்புரியும் (HNDIT) மணமகனுக்கு அரச திணைக்களத்தில் பணிபுரியும் மணமகளை எதிர்பார்க்கின்றோம். (மணமகள் வடமராட்சிக்குள் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது)

தொடர்பு: 077 864 9878
Viber- 077 634 3103

(cs 281893) (N-1)

## பணியாளர்கள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் கைத்தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு பணியாட்கள் தேவை.
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு : 077 9530 787

(CR 40548) M-1

## மணமகள் தேவை

1. சங்கானை. இந்து கௌரவகுலம் (K). 1992. விசாகம். BA(HONS) Accountant, uk citizen மணமகனுக்கு மணமகள் தேவை.8 இல் செவ்வாய் உள்ளது. - பதிவெண் - 34210
2. சுன்னாகம் - சாவகச்சேரி. இந்து கௌரவகுலம் (K). 1996. மிருகசீரிடம் BSC Engineering,Australia citizen மணமகனுக்கு மணமகள் தேவை. செய்வாய்க்குற்றம் இல்லை. பதிவெண் - 32933
3. காரைநகர்.இந்து கௌரவகுலம் (V). 1992. சித்திரை BSC in engineering,system engineer singapure மணமகனுக்கு மணமகள் தேவை. செய்வாய்க்குற்றம் இல்லை. பதிவெண் - 34141
4. உடுப்பிட்டி. இந்து கௌரவகுலம் (V). 1990. அவிட்டம். BSC in engineering,newsealand citizen மணமகனுக்கு மணமகள் தேவை. 8 இல் செய்வாய் உள்ளது. பதிவெண் - 34184
5. பளை. இந்து கௌரவகுலம் (V). 1984. அவிட்டம்.PHD ,uk citizen, divorce மணமகனுக்கு மணமகள் தேவை. செய்வாய்க்குற்றம் இல்லை. பதிவெண் - 33058
6. காரைநகர். இந்து கௌரவகுலம் (V). 1986. சித்திரை. BSC ,uk citizen மணமகனுக்கு மணமகள் தேவை. 1 இல் செய்வாய் உள்ளது. பதிவெண் - 27042
7. கரவெட்டி. இந்து கௌரவகுலம் (V). 1986. திருவோணம். BA (Hons),CIMA complited, uk citizen மணமகனுக்கு மணமகள் தேவை. செய்வாய்க்குற்றம் இல்லை. பதிவெண் - 26504
8. நயினாதீவு. இந்து கௌரவகுலம் (V). 1981. ரோகினி. MSC,IT consultant,uk citizen மணமகனுக்கு மணமகள் தேவை. 4 இல் செவ்வாய் உள்ளது. பதிவெண் - 25041

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728

## பணியாளர்கள் தேவை

**திருநெல்வேலி மற்றும் கோண்டாவிலில் இயங்கும் Food City க்கு பின்வரும் வேலையாள்கள் தேவை**

- Account Assistant
- Data Entry
- Store Keeper
- Packing
- Sales Man
- Cashier (Male /Female)

5Km க்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது

- சுயவிபரக்கோவையினை

Northwayfamilymart18@gmail.com

என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

077 764 7645

## TECHNA

Techna

Technical Institute

A/L 2022 பிரிவு

தொழினுட்பப்பிரிவு

Smart Thinking Leads To Innovate

077 170 3549

3ஆம் மாடி,
உ வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

பொறியியல் தொழினுட்பவியல் | எமது மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம் | உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்



ஜெ.சோபிகன் (2A B) (மாவட்ட நிலை - 06)
பு.தருஜிகன் (ABC) (மாவட்ட நிலை - 18)
ர.விக்சன்ராஜ் (3B) (மாவட்ட நிலை - 19)
க.தீலீப் (B 2C) (மாவட்ட நிலை - 20)
யோ. சங்கோதயன் (A 2C) (மாவட்ட நிலை - 21)
த.இசைச்செல்வி (3B) (மாவட்ட நிலை - 06)
ச.ஜினித்தா (2 BC) (மாவட்ட நிலை - 10)

ஜோ.பெ.ஜோசியா (2B C) (மாவட்ட நிலை - 22)
ர.தஜிலன் (B 2C) (மாவட்ட நிலை - 25)
அ.கஜப்பிரியன் (B 2C) (மாவட்ட நிலை - 28)
மு.மயூரிகன் (B 2C) (மாவட்ட நிலை - 29)
ம.திவாகர் (B 2C) (மாவட்ட நிலை - 30)
க.சந்தியா (2B C) (மாவட்ட நிலை - 15)
ப.தேனுஜா (B 2C) (மாவட்ட நிலை - 18)

ச.கஜநிபன் (B 2C) (மாவட்ட நிலை - 33)
சி.பிரதீபா (B 2C) (மாவட்ட நிலை - 43)
அ.திசாகன் (B 2C) (மாவட்ட நிலை - 46)
ஜெ.சரண்ஜா (3C) (மாவட்ட நிலை - 47)
சு.கஸ்தூரி (2C S) (மாவட்ட நிலை - 55)
ஜெ.சாமந்தி (B 2C) (மாவட்ட நிலை - 26)
ஜெ. ஜெசிக்கா (BCS) (மாவட்ட நிலை - 27)

மு.சவின்சன் (2C S) (மாவட்ட நிலை - 56)
அ.ஜோ.நிருசன் (3C) (மாவட்ட நிலை - 10)
வ.மு.முன்சிவ் (B2C) (மாவட்ட நிலை - 14)
மொ.உ.மொ.இன்சாவ் (B2C) (மாவட்ட நிலை - 28)
ப.உ.மொ.முன்சிவ் (BCS) (மாவட்ட நிலை - 36)
க.சுமித்திரா (BCS) (மாவட்ட நிலை - 31)
த.பிரவீனா (2C S) (மாவட்ட நிலை - 36)

**A/L 2023 Repeat Batch**
ஆரம்பம் - 11.09.2023
திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு

**A/L 2025, 2024**
விசேட பிரிவுகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில், 10.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கட்டுப் பண்ணையி லேபல மாடுண்டு
காட்டு வேனரன் கட்டிடு மாட்டைக்
குட்டிப்பாம்பும் புலியும்கண் டார்களாங்
கேட்டுப் பின்பு கிளத்துவ னாண்டே.

– மாவை சின்னக்குட்டிப்புலவர்

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2052 ஆவணி 24 ஞாயிற்றுக்கிழமை (10.09.2023) சிகரம் : 165




## ஆசாத் மௌலானாவின் திடுக்கிடவைக்கும் வாக்குமூலம்

## சஹ்ரான் குழுவுக்கு தற்கொலைத் தாக்குதல்

## பயிற்சியை வழங்கியது

# பிள்ளையானே!

அண்மையில் 'சனல்–4' தொலைக்காட்சி 'ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகளை இனம்காட்டும் வகையிலான ஆவணப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இதில் பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அரசியல் பேச்சாளராக அறியப்பட்ட ஆசாத் மௌலானா வழங்கிய வாக்குமூலம் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. மறைக்கப்பட்ட பல உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. அவரது வாக்குமூலத்தின் மிகமுக்கியமான பகுதிகள் , உண்மைகளை உய்த்துணர்வதற்காக இங்கே பிரசுரிக்கப்படுகின்றது)



### படையதிகாரிகளோடு தொடர்பு

பிள்ளையான் என்னை அழைத்துத் தங்களுக்கு ஒரு அரசியல் பேச்சாளர் வேண்டுமென்றும் அந்தப் பணியை என்னைச் செய்யும்படியும் கேட்டுக் கொண்டார். எனக்கு ஆசாத் மலாவுத் என்ற இயற்பெயரைக் கொண்ட எனக்கு. பிள்ளையான் கட்சியினர் ஆசாத் மௌலானா என்ற பெயரும் சூட்டிக் கொண்டனர்.

இப்படியே மெல்ல மெல்ல சந்தர்ப்பத்தினதும் வரலாற்றினதும் நிர்ப்பந்தத்தால் நான் பிள்ளையான் கட்சியின் எலும்பும் சதையும் இரத்தமும் ஆகிவிட்டேன்.

இதன் பின் எனக்கு தொடர்புகளுக்காக இரண்டாவது கைத்தொலைபேசியும் தரப்பட்டது. அரசியல் நிகழ்சிகளும் சம்பவங்களும் அறிக்கைகளும் முரண்பாடுகளும் உடனுக்குடன் என் தொலைபேசிக்கு அனுப்பப்பட்டன.

அரசாங்க மற்றும் உய்ர்நிலையில உள்ள படையதிகாரிகளோடும் அரசியல்வாதிகளோடும் தொடர்புகள் வளர்ந்துகொண்டே வந்தன. எதற்கும் மறுப்புச் சொல்லத்தெரியாததால் என்னால் அவற்றை ஒருகட்டத்துக்குமேல் சுமக்கமுடியாதிருந்தது.

### கருணாவை விட பிள்ளையானை நம்பிய இராணுவம்

பிள்ளையானுக்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் அமல் கணசேனவுக்கும் இடையேயான உறவுகள் வளரத்தொடங்கின. பின்னர் சுரேஷ் ஷாலே யுடனான(இவர் இன்று இராணுவப் புலனாய்வுத் தலைவராக இருக்கிறார்) உறவு ஏற்படத்தொடங்கியது. அப்போது அவர் மேஜர் தர அதிகாரி. கருணாவின் பொதுமக்கள் தொடர்பு பாராட்டத்தக்கதாக இல்லை. அவர் எப்போதுமே தன்னை ஒரு இராணுவத் தளபதி என்றும்,முட்டாள்தனமான அதிகாரிகளுக்கு நான் ஏன் தலைவணங்க வேண்டும்?" என்று நினைப்ப

04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சனல்-4’ யாருக்கு நன்மை செய்கின்றது?

○ நிலாந்தன்

‘சனல் 4’ மீண்டும் ஒரு வீடியோவை வெளியிட்டிருக்கிறது. முன்னைய வீடியோவைப் போலவே, இதுவும் ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் கூறப்பட்ட தகவல்கள் உண்மையாக இருந்தால், இலங்கைத் தீவின் அரச கட்டமைப்பும் அதன் உபகரணங்களும் எந்தளவுக்கு நம்பகத்தன்மையற்றவை என்பதனை அது வெளிப்படுத்தியிருக்கிறது. ஆசாத் மௌலானா அந்த வீடியோவின் இறுதிப் பகுதியில் கூறுகிறார்... "அதிகாரத்துக்காக தமது சொந்த மக்களையே கொன்றிருக்கிறார்கள்" என்று.

ஆசாத் மௌலானா பிள்ளையானின் உதவியாளராக இருந்தவர். அவருடைய தகப்பன் ஈ.பி.ஆர்.எல். எப். இயக்கத்தில் இருந்தவர். சொந்தப் பெயர் மிகிலார். இயக்கப் பெயர் கமலன். தமிழகத்தில் அந்த இயக்கத்தின் தலைவர் பத்மநாபா கொல்லப்பட்டபோது அவரோடு கொல்லப்பட்டவர். ஆசாத் மௌலானா ‘சனல் 4’ வீடியோவில், பிள்ளையானுக்கும் இலங்கை படைப் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளருக்கும் எதிராகச் சாட்சியமளித்துள்ளார்.

இதுதொடர்பில் அனைத்துலக விசாரணை தேவை என்று ஏற்கனவே கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறி வருகிறார். முஸ்லிம்களும் அவ்வாறான கோரிக்கையை ஏற்கனவே முன்வைத்து விட்டார்கள். இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அந்தக்கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார். அதாவது இலங்கைத்தீவின் மூன்று இனங்களும் வெவ்வேறு காரணங்களுக்காக அனைத்துலக விசாரணையைக் கேட்கின்றன. இலங்கைத்தீவின் உள்நாட்டு நீதி பரிபாலனக் கட்டமைப்பு, .புலனாய்வுக் கட்டமைப்பு, ஆட்சி முறைமை என்பவற்றின் தோல்வியையே இது காட்டுகிறது.


ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக எந்தக் கொடிய செயலையும் செய்யலாம்;யாரையும் கருவியாகப் பயன்படுத்தலாம் என்று ஒரு மனப்பாங்கு எங்கிருந்து தோன்றியது? அதுவும் தேரவாத பௌத்த பண்பாட்டுக்குள் அது எங்கிருந்து தோன்றியது? இனமுரண்பாட்டின் நேரடி விளைவு அது. ஓர் இனத்தை அழிப்பதன் மூலம் அல்லது இனப்பகையைத் தூண்டுவதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்ற சிங்கள - பௌத்த அரசுப் பாரம்பரியத்தின் தொடர் விளைவுகளில் ஒன்றுதான், முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள - பௌத்த உணர்வுகளைத் தூண்டி தனிச்சிங்கள பௌத்த வாக்குகளைத் திரட்டலாம் என்று நம்பியமை.

அந்த நம்பிக்கை பொய்க்கவில்லை. சிங்கள மக்கள் அந்தக் குடும்பத்துக்கு 2019 இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கினார்கள். ஆனால் அதே சிங்கள மக்கள் அந்தக் குடும்பத்தை ஓட ஓட விரட்டினார்கள். கடந்த ஆண்டு அந்தக் குடும்பம் இராணுவ முகாம்களிலும் வெளிநாடுகளிலும் ஒளிக்க வேண்டியிருந்தது. ஆனால் இந்த ஆண்டு அவர்கள் ஒப்பீட்டளவில் தற்காப்பு நிலைக்கு வந்து விட்டார்கள். லிபரல் முகமூடி அணிந்த ரணில் விக்ரமசிங்கவின் மறைவில் அவர்கள் படிப்படியாகத் தற்காப்பு நிலையில் இருந்து தாக்கும் நிலைக்கு முன்னேறத் தொடங்கிவிட்டார்கள். ‘சனல் 4’ தொடர்பாக நாடாளுமன்றத்தில் ராஜபக்சக்களின் கட்சிக்காரர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதிலிருந்து அதைத் தொகுத்துப் பார்க்கலாம்.

இவ்வாறு ராஜபக்சக்கள் தற்காப்பு நிலையில் இருந்து தாக்கும் நிலைக்கு முன்னேறுவதைத் தடுக்க வேண்டும் என்று மேற்கு நாடுகளும் விரும்பும்; சர்வதேச நாணய நிதியமும் விரும்பும். அந்த விருப்பத்தை ‘சனல் 4’ வீடியோ ஓரளவுக்கு நிறைவேற்றுமா? அந்த வீடியோவின் உடனடி விளைவாக ராஜபக்சக்களின் கீர்த்தி , உலக அளவில் மேலும் கெடும். ராஜபக்சக்களின் அந்தஸ்து உலக அளவில் ஏற்கனவே கெட்டுப் போய்விட்டது. இப்பொழுது இந்த வீடியோ அதை மேலும் கெடுக்கும். ஆனால் அது அதன் எதிர்மறை விளைவாக உள்நாட்டில் அவர்களுக்கு ஆதரவைக் கூட்டக் கூடும். புலம்பெயர்ந்த புலிகள் அமைப்புகளும் வெள்ளைக்கார நாடுகளும் சேர்ந்து யுத்த வெற்றியை அபகரிக்கும் நோக்கத்தோடு உருவாக்கியதே அந்த வீடியோ என்று சொன்னால் அது சிங்கள - பௌத்த கூட்டு உளவியலில் ஏதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.

மேலும், அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடக்கவிருக்கும் ஐ.நா. கூட்டத் தொடரும் சிங்கள மக்கள் மத்தியில் மேற்குக்கு எதிரான உணர்வுகளை அதிகப்படுத்தும்.

ஒரு இனத்தை அழிப்பதன் மூலம் அல்லது இனப்பகையைத் தூண்டுவதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்ற சிங்கள பௌத்த அரசுப் பாரம்பரியத்தின் தொடர் விளைவுகளில் ஒன்றுதான், முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள பௌத்த உணர்வுகளைத் தூண்டி தனிச்சிங்கள பௌத்த வாக்குகளைத் திரட்டலாம் என்று நம்பியமை.




செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர்தான் ஜனாதிபதித் தேர்தல் வரும். எனவே தேர்தலில் மேற்கு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுக்கும் எதிரான உணர்வலைகள் வாக்களிப்பில் தாக்கம் செலுத்தும். இப்படிப் பார்த்தால் ‘சனல் 4’ வெளியுலகில் ராஜபக்சக்களின் அந்தஸ்தை குறைத்திருக்கின்றது. அதேசமயம் உள்நாட்டில் அவர்களுக்கு அனுதாபத்தைப் பெருக்கக்கூடும்.

ஆனாலும் ராஜபக்சக்கள் அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் தேர்தலில் போட்டியிடும் மனோநிலையில் இல்லை என்றே தெரிகிறது. அவர்களுக்குத் தங்களை எப்படித் தற்காத்துக் கொள்வது என்று தெரியும். உலக அளவில் தங்களுடைய அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளும் வரை அவர்களுக்கு ஒரு பதிலி தேவை. ரணில் விக்கிரமசிங்க அதற்கு மிகப் பொருத்தமானவர். அவருக்குப் பின்னே பதுங்குவதன் மூலம் ராஜபக்சக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தம்மை மேலும் ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம். தென்னிலங்கையில் தன்னெழுச்சிப் போராட்டங்கள் தோற்கடிக்கப்பட்டு, கிட்டத்தட்ட ஓராண்டு காலத்துக்குள், ராஜபக்ச குடும்பம் பதுங்கும் நிலையிலிருந்து தற்காப்பு நிலைக்கு முன்னேறியிருப்பது அதைத்தான் காட்டுகின்றது. எனவே தம்மை முழுமையாகப் பலப்படுத்திக் கொள்ளும்வரை அவர்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பார்களா என்பது சந்தேகமே.

அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதித் தேர்தலைக் குறித்து இடைக்கிடை வீறாப்பாகக் கருத்துக்களைத் தெரிவித்து வந்தாலும், ராஜபக்சக்கள் வெளிப்படையாக வாய் திறப்பதில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அந்தக்குடும்பத்தின் அடுத்த வாரிசாகக் கருதப்படும் நாமல் ராஜபக்ச தன்னை பலப்படுத்திக் கொள்ளும் வரையிலும் அவர்கள் பொறுத்திருப்பார்கள். எனவே அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க அவர்களுடைய பதிலியாக முன்னிறுத்தப்படும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. ராஜபக்சக்கள் ரணிலுக்கு இடைஞ்சலாக மேலெழுவதைத் தடுக்க ‘சனல்4’ வீடியோ உதவக் கூடும்.

இதில் ஒரு வினோதமான அரசியல் சமன்பாடு உண்டு. அதன்படி ராஜபக்சக்களுக்கு எதிரானது ரணிலுக்குச் சாதகமானது. ஆனால் அடுத்த ஆண்டு ராஜபக்சக்களின் பதிலியாகத்தான் ரணில் களமிறங்கக்கூடும். ஆயின், அதில் அவருக்குக் கிடைக்கக்கூடிய வெற்றி யாருடைய வெற்றியாக இருக்கும்? அது அவருடைய சொந்த வெற்றியா அல்லது ராஜபக்சக்களின் வெற்றியா?

எதுவாயினும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்சக்கள் களமிறங்குவதை குறிப்பிடத்தக்க அளவுக்கு அந்த வீடியோ தடுக்கக்கூடும். அதே சமயம் அந்த வீடியோ தமிழ் அரசியலில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும்?

உடனடிக்கு அது கிழக்கில் பிள்ளையானுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். எனினும், அங்கேயும்கூட பிள்ளையானுக்கு ஒரு சாதகமான இடம் உண்டு. ஒரு முஸ்லிம் அவரைக் காட்டி கொடுத்து விட்டார் என்பதைத் தமிழ் - முஸ்லிம் உறவுகளைப் பாதிக்கும் விதத்தில் உருப்பெருக்கினால், அது கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிரான தமிழ் உணர்வுகளுக்குத் தலைமை தாங்கத் தேவையான பிள்ளையானின் தகைமையை மேலும் அதிகப்படுத்தக்கூடும். ஆனால் சீயோன் தேவாலயத்தில் கொத்தாகக் கொல்லப்பட்ட குழந்தைகளுக்கு யார் பொறுப்பேற்பார்கள்?

இது உள்நாட்டளவில். அதேசமயம் அனைத்துலக அளவில் நீதிக்காகப் போராடும் தமிழ் அமைப்புகளுக்கு அந்த வீடியோ சாதகமானது. தமிழ் மக்களால் ஏற்கனவே குற்றஞ்சாட்டப்படும் ஒரு குடும்பத்தை அந்த வீடியோ மேலும் அனைத்துலக அளவில் அம்பலப்படுத்தியிருக்கிறது. இலங்கைத்தீவின் அரசுக் கட்டமைப்பை அது அபகீர்த்திக்கு உள்ளாக்கியிருக்கிறது. ஏற்கனவே அமெரிக்கக் கண்டம் ராஜபக்சக்களுக்கு ஆபத்தான ஒரு கண்டமாக மாறி விட்டது. அந்தக்கண்டத்தில் உள்ள இரண்டு பெரிய நாடுகளான அமெரிக்காவும் கனடாவும் ராஜபக்சக்களுக்கு எதிராக நிர்ணயகரமான சில நகர்வுகளை முன்னெடுத்திருக்கின்றன. குறிப்பாக கனடா இரண்டு மூத்த ராஜபக்சக்களுக்கு எதிராகத் தடை விதித்திருக்கிறது. அவ்வாறு தடை விதிக்கப்பட்ட அதே காலப்பகுதியில், கடந்த மார்ச் மாதம் அமெரிக்கா ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் அந்தச்சட்டத்தின் பிரகாரம் இரண்டு மூத்த ராஜபக்சக்களுக்கும் அமெரிக்காவில் நெருக்கடியுண்டு. தவிர, அமெரிக்காவும் கனடாவும் சில இராணுவ அதிகாரிகளுக்கு பயணத் தடை விதித்திருக்கின்றன. குறிப்பாக, இலங்கைத் தீவின் இராணுவத் தளபதி மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி ஆகியோருக்கு எதிராகத் தடைகள் உண்டு. இவற்றுடன் கனடா இனப்படுகொலை தொடர்பில் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது.


இவற்றுடன் கடந்த ஆண்டு ஐ.நா. தீர்மானம் ஒன்றின் பிரகாரம் போர்க் குற்றங்கள் தொடர்பான சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான அலுவலகம் ஒன்று இயங்கி வருகின்றது. அதில் சேகரிக்கப்படும் சான்றுகளும் சாட்சியங்களும் என்றைக்கோ ஒருநாள் இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்தப்படக் கூடியவை.

மேற்கண்ட நகர்வுகள் யாவும் மேற்கத்தியப் பரப்பில் நிகழ்ந்தவை. இவற்றுடன் அண்மையில் இந்தியாவில், ராமேஸ்வரத்தில் வைத்து உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்த கருத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். இலங்கைத்தீவில் இடம்பெற்றது மிகப் பெரிய மனிதப் படுகொலை அல்லது இனப்படுகொலை என்ற பொருள்பட அவர் பேசியிருந்தார்.

இந்த வரிசையில் கடந்த வாரம் ‘சனல் 4’ வீடியோவும் வெளிவந்திருக்கிறது. மேற்கண்ட அனைத்து விடயங்களும் நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்களுக்குப் பலம் சேர்ப்பவை. இலங்கைத்தீவின் அரசியல் கலாசாரம் பொறுப்பு கூறும் பண்புடையது அல்ல என்பதை தமிழ் மக்கள் உலக சமூகத்தின் முன் நிரூபிப்பதற்கு அவை உதவும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அ.நிக்ஸன்

# தமிழ் இன அழிப்பை மூடி மறைக்கும் சனல்-4!

## இனப்படுகொலைக்கு நீதி கிடைத்திருந்தால் ஈஸ்டர் தாக்குதல் நடந்திருக்காது.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் சூத்திரதாரி யாராக இருக்கும் என்பது தொடர்பான சந்தேகங்கள், ஊகங்கள், தாக்குதல் நடந்த சில மாதங்களிலேயே எல்லோர் மனதிலும் அவரவர் தன்மைகளுக்கு ஏற்ப எழுந்தன. இந்தப் பின்புலத்தில் ' சனல் 4'தொலைக்காட்சி முழு விபரங்களையும் ஆதாரத்துடன் வெளியிட்டிருக்கிறது.

பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தாபய ராஜபக்ச மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என்று பலர் மீது போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே சுமத்தப்பட்டிருந்தன. ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அறிக்கைகளிலும் இந்தக் குற்றச்சாட்டு விபரங்கள் உண்டு. ஆனாலும் ஈழத் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அத்தனை குற்றங்களையும் மூடி மறைத்து 2020 ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபயவைக் களமிறக்கி அவரை வெற்றிபெற வைப்பதில் இலங்கைக் கத்தோலிக்கத் திருஅவையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் முழுமையாக ஈடுபட்டார் என்பது பகிரங்கமான உண்மை. இதனால் தமிழர்களின் அரசியல் விடுதலை, இறுதிப் போரில் நடத்தப்பட்ட இன அழிப்பு, போர்க் குற்றம் தொடர்பான எந்த ஒரு அக்கறையும் மல்கம் ரஞ்சித்திடம் இருந்திருக்கவில்லை என்பது அப்போதே பட்டவர்த்தனமாகியது.

2009 மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்டபோது, கோத்தாபய ராஜபக்சவுக்கு வெளிப்படையாகவே நன்றியும் பாராட்டும் தெரிவித்திருந்த மல்கம் ரஞ்சித், தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதைவிடவும் ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் நீட்சியிலேயே முழுக் கனத்தையும் செலுத்தியிருந்தார் என்பதும் பகிரங்கம். "இலங்கை அரசு" என்ற கட்டமைப்பும் அதன் சட்டங்களும் பல்லின சமூகங்களுக்கு ஏற்றதாக இல்லை என்பதைக்கூட மல்கம் ரஞ்சித் ஏற்கத் தயாராக இல்லை.

இந்தப் பின்னணியிலேதான் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபயவுக்கு ஆதரவு வழங்கியதோடு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் கோரியிருந்தார். விசாரணைகள் இடம்பெற்றுக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என்று மல்கம் ரஞ்சித் அப்போது உறுதியாக நம்பிக்கையும் வெளியிட்டிருந்தார். ஆனால் இறுதிப் போரில் நடந்த மனிதப் படுகொலைகள், தமிழ் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் எதிலும் மல்கம் ரஞ்சித் கவனம் செலுத்தியதாக இல்லை. 2012 இல் முதன் முறையாக இலங்கை குறித்த தீர்மானம் ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில் நிறைவேற்றப்பட்ட போது, சர்வதேச விசாரணை தேவையில்லை என்று மல்கம் ரஞ்சித் நியாயப்படுத்தியிருந்தார். இலங்கைக்கு உள்ளேயே விசாரணைகளை நடத்த முடியும் என்றும் அவர் பரிந்துரை செய்திருந்தார். ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய விசாரணைக்குக் கோத்தாபயவை நம்பியிருந்த மல்கம் ரஞ்சித், உரிய நடவடிக்கை எடுக்கத் தாமதமாகியதால் சர்வதேச விசாரணையைக் கோரியிருந்தார். 2022 இல் ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்குச் சென்றிருந்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குச் சர்வதேச விசாரணையைக் கோரிய மல்கம் ரஞ்சித், 2009 இறுதிப்போர் மற்றும் 1958 இல் இருந்து மேற்கொள்ளப்பட்ட தமிழர்கள் மீதான படுகொலைகள் பற்றிய விசாரணைகளுக்கு மாத்திரம் உள்ளக விசாரணை போதுமென்று பரிந்துரை செய்தமை வேடிக்கை தான்.

கோத்தாபய ஜனாதிபதியாக இருந்தபோது பௌத்த சமயத்தை முதன்மை மதமாக ஏற்றுக்கொள்வதாகவும் மல்கம் ரஞ்சித் பகிரங்கமாக உறுதியளித்திருந்தார். இது மல்கம் ரஞ்சித்திடம் இருந்த சிங்களத் தேசிய உணர்வைப் பகிரங்கப்படுத்தியது.

சமயத் தலைவராக அதுவும் சர்வதேச கர்த்தினால் அந்தஸ்துடன் இருந்தாலும் பேராயர் மல்கம் ரஞ்சித்திடம் தனது இனத்துக்குரிய தேசியச் சிந்தனை இருப்பதில் தவறில்லைத்தான். ஆனால் அந்தச் சிங்களத் தேசிய உணர்வு இலங்கைத் தீவில் இருக்கின்ற தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் விடுதலையை நிராகரிக்கும் தன்மை கொண்டதாக ஒரு பேராயரிடம் இருக்க முடியாது. குறிப்பாக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பற்றிய உண்மை விபரங்களை 'சனல் 4' தொலைக்காட்சி வெளிப்படுத்திய பின்னர் உடனடியாக மீண்டும் சர்வதேச விசாரணையைக் கோரியிருந்த மல்கம் ரஞ்சித், 2009 இறுதிப் போரில் ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டும் பல இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து காணாமல் ஆக்கப்பட்டமை பற்றியும் எந்தக் கருத்தையும் கூறவில்லை.

இந்தப் பின்புலத்திலேதான் ஈத்தமிழர்களின் அரசியல விடுதலைக்கான நிரந்த அரசியல் தீர்வு பற்றிய உரையாடல்கள் தற்போது ஒட்டுமொத்த இலங்கைத்தீவு மக்களின் ஜனநாயக உரிமை அல்லது மனித உரிமைப் பாதுகாப்பு விவகாரமாக மாறி வருவதையும் அவதானிக்க முடியும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 269 பேருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் முப்பது வருட போரிலும் அதற்கு முன்னர் 1958 இல் இருந்து தமிழர்கள் மீது நடத்தப்பட்ட கொலைகள், வன்முறைகள் பற்றிப் பேசுவதைவிடவும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிக் குரல் கொடுப்போரின் பின்னணி அதிகளவு சந்தேகத்தையே உண்டாக்குகின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்காகச் சிங்கள ஆட்சியாளர்கள், சிங்கள இராணுவ உயர் அதிகாரிகள் சிலரினால் கையாளப்பட்ட தமிழ் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் 2009 முள்ளிவாய்க்கால் போருக்கே பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன என்ற உண்மையை 'சனல் - 4' தொலைக்காட்சி வெளியிடவில்லை.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவில் இருந்து ரணில் விக்கிரமசிங்க வரையும் தமிழர்களின் போராட்டத்தைச் சர்வதேச அரங்கில் பயங்கரவாதமாகத் திசை திருப்பி முறியடிக்க, தமிழ் முஸ்லிம் ஆயுதக் குழுக்களுக்குச் சம்பளம் வழங்கி போரில் ஈடுபடுத்தியிருந்தனர் இதற்கு அமெரிக்க இந்திய அரசுகளும் அப்போது போருக்கு ஒத்துழைத்தன என்ற உண்மைகளை 'சனல் - 4'ஆதாரங்களுடன் வெளியிட விரும்பவில்லை என்பதையே ஈஸ்டர் தாக்குதல் பற்றிய ஆவணப் படம் சித்திரிக்கிறது.

ஆவணப் படத்தின் பின்னர், சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்த மறுகணமே பேராயர் மல்கம் ரஞ்சித்தும் அவ்வாறு கோரியுள்ளார் என்றால், சிங்கள அரசியல் தலைவர்களும் மல்கம் ரஞ்சித் போன்றோரும் 2009 நடந்த இறுதிப் போரையும் ஈழத் தமிழர்களின் எண்பது வருட அரசியல் விடுதலைப் போராட்டத்தையும் எப்படிப் பார்க்கின்றனர் என்பது புரிகின்றது.

இலங்கை சிறிய அரசு. ஊழல் மோசடி அதிகாரத் துஷ்பிரயோகம் நிறைந்த அரசு. அங்கு இன ஒடுக்கல் நடக்கிறது. இவை பற்றியெல்லாம் தெளிவாகத் தெரிந்தாலும், தமது புவிசார் அரசியல் பொருளாதார நோக்கில் தெரியாதது போன்று அமெரிக்க இந்திய மற்றும் சீன அரசுகள் இயங்குகின்றன.

வல்லரசுகளின் இந்த அணுகுமுறைதான் சிங்கள ஆட்சியாளர்களுக்குக் கிடைத்த யோகம். ஆனால் வல்லரசுகளின் இந்தப் பிழையான அணுகுமுறைகள் பற்றி 'சனல் - 4' தொலைக்காட்சி வெளிப்படுத்தவேயில்லை. ஏனெனில் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அரசியல் நிகழ்ச்சி நிரல்தான் இங்கு பிரதானமாகிறது. இந்த இடத்திலேதான் மல்கம் ரஞ்சித்தின் செயற்பாட்டையும் நோக்க வேண்டியுள்ளது. தமிழர்களின் அரசியல் நியாயத்தை முடக்க எண்பது வருடங்களாக வெவ்வேறு வியூகங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுக் கொண்டிருக்கும் அநீதிகளை வெளிப்படுத்தக் கூடிய 'மூலங்கள்' வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ்க் கத்தோலிக்க ஆயர்கள், அருட் தந்தையர்கள் பலருக்கும் நன்கு தெரியும். அவற்றை அவர்கள் சர்வதேச அரங்கில் பகிரங்கப்படுத்தியுமுள்ளனர். ' சனல் - 4 ' தொலைக்காட்சிக்கும் இந்த உண்மை புரியும்.

முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் , முள்ளிவாய்க்காலில் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டதாக ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் வாக்குமூலம் வழங்கியபோது பேராயர் மல்கம் ரஞ்சித்தின் மனச்சாட்சி இழுத்து மூடப்பட்டிருந்தது. ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை மற்றும் இன அழிப்பு விசாரணைக் கோரிக்கை அல்லது ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு அமைவாகப் போர்க்குற்ற விசாரணை நடத்துவது பற்றிய விவகாரங்கள் கூட பிடித்தபோதும் மல்கம் ரஞ்சித் வாய் திறக்கவில்லை. பேராயர் என்ற அந்தஸ்தும், வத்திக்கான் திருத்தந்தையின் கர்த்தினால்களில் ஒருவர் என்ற சர்வதேச அங்கீகாரமும் கொண்டவரான மல்கம் ரஞ்சித், பௌத்த சமயத்தை மையப்படுத்தி தன் சிங்கள இனம் சார்ந்து மாத்திரம் நியாயம் கோரிப்புறப்பட்டிருக்கிறார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 269 பேரில் அதிகமானோர் தமிழர்கள். ஆகவே பாதுகாப்பற்ற தமிழ்ச்சமூகம் மீதுதான் தாக்குதல் இலக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையைக் கூட மல்கம் ரஞ்சித் புரிந்து கொண்டவராக இல்லை. மாறாகத் தேவாலயங்கள் இலக்கு வைக்கப்பட்டமை என்பது மாத்திரமே மல்கம் ரஞ்சித்தின் கவனமாக இருந்தது. இதனை அவர் வழங்கிய நேர்காணல்கள் எடுத்துக் காட்டுகின்றன. 1982 இல் அருட்தந்தை சிங்கராயர் கைது செய்யப்பட்டதில் இருந்து 2009 போர் இல்லாதொழிக்கப்படும் வரை ஒன்பது அருட் தந்தையர்கள் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். மேலும் சில அருட் தந்தையர்கள் காயமடைந்துள்ளனர். பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். வேறு சிலர் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சமடைந்துள்ளனர்.

வடக்குக - கிழக்கில் நூற்றுக்கும் அதிகமான தேவாலயங்கள் குண்டுத் தாக்குதலினால் முற்றாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் சில தேவாலயங்கள் இன்னமும் முடங்கியுள்ளன. முப்பது வருடப் போரின் அவலங்கள் , இழப்புகளுக்கு மத்தியில் வடக்கு-கிழக்குத் தமிழ் ஆயர்கள், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் பொறுப்புடன் செயற்பட்டனர். 2009 இன் பின்னரே வடக்கு-கிழக்கு ஆயர் மன்றம் உருவாக்கப்பட்டது. அது தமிழ் ஆயர் மன்றம் என்று வெளிப்படையாகக் கூறப்படுவதுமில்லை. இலங்கைக் கத்தோலிக்கத் திருஅவையின் கூட்டுப் பொறுப்பு மற்றும் சமய ஒற்றுமை என்ற பண்பின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு ஆயர் மன்றம் இயங்குகின்றது. சமகால அரசியல் விவகாரங்களில் சில தமிழ் அருட் தந்தையர்கள் பின்பற்றுகின்ற நிதானம், பொறுப்பு, பேராயர் மற்றும் திருத்தந்தையின் கர்தினால் என்ற முறையில் ரஞ்சித் மல்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை.சாதாரண ஒரு சிங்கள அரசியல்வாதிக்குரிய குணாம்சங்களே மல்கம் ரஞ்சித்திடம் விஞ்சியுள்ளன.

அறுபது வருடங்களுக்கு முன்பு சிறிமாவின் ஆட்சிக்கு எதிராகக் கறுப்புக்கொடிப் போராட்டத்தை நடத்தியவர் கொழும்பின் முதலாவது சிங்களப் பேராயர் தோமஸ் கூரே. 1965 இல் முதலாவது கர்த்தினாலாகவும் இவர் தெரிவாகியிருந்தார். இவருக்குப் பின்னர் இலங்கையில் கர்தினாலாக எவரும் நியமிக்கப்படவில்லை. 2009 யுத்தம் முடிந்ததும் 2010 இல் பேராயர் மல்கம் ரஞ்சித் இரண்டாவது கர்தினாலாக திருத்தந்தையினால் நியமிக்கப்பட்டார். கிறிஸ்தவர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கமே முதலில் செயற்பட்டது. 1960 ஜூலை மாதம் பதவிக்கு வந்த அரசாங்கம் ,நன்கொடை பெறும் பாடசாலைகளைச் சுவீகரித்தபோது, கத்தோலிக்கப் பாடசாலைகளும் அரச உடைமையாக்கப்பட்டன. இதனை எதிர்த்து இலங்கைத்தீவு முழுவதும் தமிழ் - சிங்கள கத்தோலிக்க மக்கள் ஒன்றுபட்டுப் போராடினர். தோமல் கூரே இதற்குப் பிரதான காரணமாக இருந்தார்.

ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிவுண்டு, 2018 பெப்ரவரியில் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவாக மாற்றம் பெற்ற ராஜபக்ச குடும்பத்துக்குக் குடைபிடிக்கும் அரசியலையே மல்கம் ரஞ்சித் முன்னெடுத்திருந்தார். இந்தநிலையில், ராஜபக்ச குடும்பத்தை ஆதரித்தமைக்காக 'சனல் - 4' ஆவணப் படத்தின் பின்னர் பேராயர் பாவ மன்னிப்புக் கேட்டிருக்கலாம். ஆனாலும் கத்தோலிக்கர்கள் அல்லாத பௌத்த சிங்கள மக்களுக்காகக் குரல் கொடுத்தமைபோன்று, தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கான பேராயராகக்கூட மல்கம் ரஞ்சித் செயற்படவில்லை என்பதை எவரும் மறுக்க முடியாது. தமிழர்கள் கோருகின்ற இன அழிப்பு விசாரணை அல்லது குறைந்தபட்சம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சர்வதேசப் போர்க் குற்ற விசாரணைக்கு மல்கம் ரஞ்சித், ஆயர் இராயப்பு ஜோசப்புடன் இணைந்து அப்போது கடும் அழுத்தம் கொடுத்திருந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்திருக்காது என்பதே வெளிப்படை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஹ்ரான் குழுவுக்கு....





ஆசாத் மௌலானா





வர். அவர் கோத்தாபய மற்றும் சரத் பொன்சேகாவுடன் மட்டுமே பேசுவார். அவர் விசுவாசமாக இருக்கமாட்டார் என்றும் பிள்ளையானே எப்போதும் விசுவாசமாக இருப்பார் என இராணுவ புலனாய்வுப் பிரிவு நம்பியது.'

முரண்பாடோடு உடன்பாடுடைய கருணா, பிள்ளையான் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரை நான் ஒத்துழைத்து ஒருங்கிணைக்க வேண்டும். கரணம் தப்பினால் மரணம். அந்தக்கால கட்டத்தில் கொழும்பிலும் கொழும்புக்கு வெளியிலும் பல அரசியல் படுகொலைகளும், எண்ணற்ற இனந்தெரியாத கொலைகளும், வெள்ளைவான் ஆட் கடத்தல்களும் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளும் இடம் பெற்றன. இவைகள் இராணுவ ப்புலனாய்வுப் பிரிவின் உத்தரவுக்கு அமைய பிள்ளையான் குழுவால் மேற்கொள்ளப்பட்டதை நான் பின் நாட்களில் அறிந்து கொண்டேன்.

2007 ளிலிருந்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் மாதாமாதம் பிள்ளையான் கட்சிக்கு பணம் ஒதுக்கப்பட்டது. மாதம் ரூபா 3.5 மில்லியன் தரப்பட்டது. இதற்காகப் பிள்ளையான் என்னை (ஆசாத் மௌலானா) நியமித்தார். நான்தான் ஒவ்வொரு மாதமும் காசை எடுத்துக்கொண்டுவந்து பிள்ளையானிடம் கொடுப்பேன். சம்பளம் தருவதற்குப் பொறுப்பாக இருந்தவர் மொஹமட். இவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி.

## பிள்ளையான் கும்பலின் கொலைப்பட்டியல்

ஜனநாயகப் பாதையில் நம்பிக்கை கொண்டிருந்த நான் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளாத போதும் , அந்த அமைப்பிலிருந்து வெளியேறினால் எனக்கும் எனது குடும்பத்துக்கும் உயிராபத்து ஏற்படும் என்ற அச்சத்தினால், தொடர்ந்தும் அங்கு இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

பிள்ளையானின் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி செய்த எண்ணற்ற சட்டவிரோத நடவடிக்கைகளில் சில:

1. **தமிழ் நெட் ஆசிரியர் சிவராம் கொலை.**
2. **மட்டக்களப்பு வீரகேசரி பத்திரிகையாளர் நடேசன் கொலை.**
3. **திருகோணமலை தமிழர் புனர்வாழ்வு அமைப்பாளர் விக்கினேஸ்வரன் படுகொலை.**
4. **தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை.**
5. **கொழும்பு வர்த்தகர் பாலா கடத்தப்பட்டுப் படுகொலை.**
6. **கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் ரவீந்திரநாத் கொலை. இவர்**
7. **பொட்டுஅம்மானுக்கு வேலை செய்கிறார் என்ற சந்தேகத்தின்பேரில் கொல்லப் பட்டார்.**
8. **மட்டக்களப்பு மாவட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கச் செயற்பாட்டாளர் இருவர் கடத்தப்பட்டுப் படுகொலை.**
9. **ஊடகவியலாளர் லசந்தா விக்கிரமதுங்கா கொலை.**
10. **பிரகீத் எக்னெலிகொட கொலை. 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது இவர் பிள்ளையான் குழுவால் கொலைசெய்யப் பட்டார்.**
11. **இவர்கள் 150 பேருக்கும் மேலானவர்கள் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.**

இந்தக் கொலைகள் அனைத்தும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் குறிவைக்கப்பட்டு, இராணுவ உளவுப்படையால் புறச் சூழல்கள் ஏற்படுத்தப் பட்டு, பிள்ளையான் குழுவால் செய்துமுடிக்கப்பட்டன. பிள்ளையானும் அவரது கட்சியும் கூலிக்குக் கொல்லும் படையேயொழிய அதற்கும் ஒடுக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. பிள்ளையான் குழுவின் கொலையாளிகளை இராணுவப் புலனாய்வுத்துறையினர் கடவுச் சீட்டு எடுத்துக் கொடுத்து பணமும் கொடுத்து வெளிநாடுகளுக்கு அகதிகளாக அனுப்பி வைப்பர். பெரும்பாலானோர் பரிஸ்நகரத்துக்கும் சிலர் மத்திய கிழக்குக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

பரிஸில் இலங்கைத்தூதரகமும் பிள்ளையானின் அரசியல் ஆலோசகருமான ஞானம்(ஸ்டாலின்) என்பவரும் இந்தக் கொலையாளிகள் அகதியாவதற்கு வழி செய்துகொடுத்துப் பராமரித்து வருகின்றனர். அவர்கள் இப்பொழுதும் பரிஸில் வாழ்கின்றனர்.

## மாதாமாதம் இராணுவச் சம்பளம்

கிழக்கு மாகாணசபைத்தேர்தல் 2008 மேயில் நடந்தது. பிள்ளையான் அந்தத்தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சராக வந்தார்.

ரகு பிள்ளையானின் பிரத்தியேகச் செயலாளர் ஆனார். நான்(ஆசாத் மௌலானா) ஒருங்கிணைப்புச் செயலாளராக வந்தேன்.

## புலிகளைப் பிரித்த 'றோ'

2008 பிள்ளையான் முதலமைச்சரான பின்னர் ஓகஸ்ட் மாதமளவில் பஸில் ராஜபக்ச ஒரு சந்திப்புக்காக அழைத்திருந்தார். அங்கு நானும் பிள்ளையானும் அவரது அலுவலகம் சென்ற போது ஒரு பெண்மணி அங்கு அமர்ந்திருந்தார். பஸில் அவரை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவரது பெயர் திருமதி பிரபா மூர்த்தி. அவருடன் தொடர்பைப்பேணும்படி அவரது தொலைபேசி இலக்கத்தைத் தந்தார். எமது தொலைபேசி இலக்கத்தையும் அவரிடம் கொடுத்தோம். இவர் இந்திய உளவுப்படையான றோவினால் நியமிக்கப்பட்டவர். வடக்குப் புலிகளிலிருந்து கிழக்குப்புலிகளைப் பிரித்ததில் பெரும்பங்கு இந்திய உளவுப்படையான றோவையே சாரும்.

முதலமைச்சர் பிள்ளையானையும் எங்களையும் வரச் சொல்லிக் கோத்தாபய கூப்பிட்டார். சர்வதேச சமூகங்கள் எமது ஆயுதங்களைக் களையும்படி நெருக்குவாரம் செய்கின்றன. சர்வதேசத்துக்குக் காட்டுவதற்குச் சில ஆயுதங்களை ஒப்படைக்கும்படியும் ஏனையவற்றை மறைத்து வைத்திருக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

2009 மார்ச் 3 எனது (ஆசாத் மௌலானா) தலைமையில் மட்டக்களப்பு மைதானத்தில் பிரிகேடியர் பெர்னாண்டோ மற்றும் டி.ஐ.ஜி எடிஷன் குணதிலக்காவிடம் ஆயுதங்கள் கையளிக்கப்பட்டன. நான் முன்னணியில் நின்று இதைச் செய்தேன். அதனோடு சேர்ந்து தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் இராணுவக் குழு கலைக்கப்பட்டு விட்டதையும் அறிவித்தோம்.

2010 ஜனாதிபதித் தேர்தல் வந்தது. அதன் பிறகு பொதுத்தேர்தல் வந்தது. பொதுத்தேர்தலுக்கு எமது கட்சிக்கு 'றோ' ரூபா 5 மில்லியன் தேர்தற் செலவுக்காகத் தந்தது. வேறு பல சந்தர்ப்பங்களிலும் நிறையக் காசு கிரமமாகத் தந்தது. றோவோடு உறவைப் பேணும் பணி என்னிடமே விடப்பட்டது.

2012 மே மாதம் மாகாணசபை கலைந்தது. அதற்குப் பிறகு வந்த தேர்தலில் பிள்ளையான் வெற்றி பெற்றபோதும் முதலமைச்சராக வர முடியவில்லை. அதன் பிறகு கிழக்கின் முதலமைச்சரானார் நயீப் அப்துல் மஜீத். ஜனாதிபதியின் விசேட ஆலோசகராக பிள்ளையான் நியமிக்கப்பட்டார். நான் பிள்ளையானது செயலாளராக நியமிக்கப்பட்டேன்.

2015 ஜனவரி 8 தேர்தலில் மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியானார். வழக்கமாக இராணுவம் தரும் சம்பளம் தரப்பட்டது.

## சுரேஷ் ஷாலேயின் எச்சரிக்கை

3 நாட்களுக்குப் பிறகு சுரேஸ் ஷாலே எங்களைக் ஹபரணைக்கு வரச் சொன்னார். ஹபரணைக் காட்டிலிருந்து நானும் பிள்ளையானும் சுரேஸ் ஷாலேயின் காரில் ஏறி மூன்று பேரும் கொழும்பை நோக்கிப் பயணித்தோம். சுரேஸ் ஷாலே தான் காரை ஓடிக் கொண்டு வந்தார்.

"அரசாங்கம் மாறி விட்டது. எந்த நேரமும் என்னவும் நடக்கலாம். ஆயுதங்களை ஒழியுங்கோ. என்னையும் மாற்றலாம். சம்பளம் சிலவேளை தொகையாகக் கொடுக்க விட மாட்டாங்கள். ஆட்களுக்கு நேரடியாகத்தான் கொடுக்க வேண்டி வரும். எதற்கும் 15 பொய்ப் பேர்களை எழுதித்தாங்கோ. இந்தப்பேர்களை சம்பள லிஸ்டில் சேர்த்து விடுகிறோம். அந்தக் காசைப் பிரத்தியேகமாகக் கொடுக்கச் சொல்லுகிறேன்."

என்று சுரேஷ் ஷாலே எங்களுக்கு அறிவுறுத்தினார். அவர் சொன்னபடி செய்தோம்.

சிறிதுகாலத்துக்குள்ளேயே ரணில் அரசாங்கம் கொடுத்த குடைச்சலால் பிள்ளையான், ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் சரணடைந்தார். 5 மாதம் அவரை 4 ஆம் மாடியில் வைத்திருந்தார்கள். சிறையிலிருந்த காலத்தில் நான் பிள்ளையானை ஒவ்வொரு சனிக்கிழமையும் அனுமதி பெற்றுச் சந்திப்பேன். 5 மாதங்களுக்குப் பிறகு பிள்ளையானை மட்டக்களப்புச் சிறைக்கு மாற்றினார்கள். அங்கும் சட்டத்தரணி தேவைப்படும்போது பஸிலிடம் தொடர்பு கொண்டு கேட்கும்படி சுரேஷ் ஷாலே கூறினார். இதற்கிடையில் சுரேஷ் ஷாலே மலேசியத் தூதரகத்துக்கு பாதுகாப்புப் பொறுப்பாளராக மாற்றப்பட்டார். பஸிலிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி கேட்டபோது, அவர் சட்டத்தரணி அனில் சில்வாவை தொடர்புபடுத்திவிட்டார். அவர் ஒரு ஜனாதிபதி சட்டத்தரணி. அவர் இந்த வழக்கைப் பொறுப்பெடுத்தார். அதன் பிறகு நான் அனில் சில்வாவைச் சந்தித்து வழக்குத் தொடர்பாகக் கலந்துரையாடினேன்.

## தற்கொலைத் தாக்குதல் பயிற்சியும் முஸ்லிம் கைதிகளும்

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் பிள்ளையானின் பாதுகாப்புக் கருதி அவருக்குத் தனியான ஒரு பெரிய அறையைக் கொடுத்திருந்தார்கள்.

அந்த அறையில் வேறு யாரையும் தங்க வைக்க வேண்டுமானால் பிள்ளையானது அனுமதியோடுதான் தங்க வைப்பார்கள்.

பிள்ளையான் சிறைக்குள்ளே இருக்கும் போது எவருக்கும் தெரியாமல் கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தினார்.

அந்தத் தொலைபேசியை சிறைக்காவலர் ஒருவர் ஊடாக நான்தான் அனுப்பி வைத்தேன். அந்தத் தொலைபேசியில் இரவில் என்னோடு கதைப்பார். 2017, 2018 காலங்களில் சிறையின் அத்தியட்சகர் அக்பர். அவர் என்னுடன் தனிப்பட்ட முறையில் மிகவும் நெருங்கிய நண்பராக இருந்தார். 2017 ஓகஸ்ட் மாதம் வழமையாகச் சந்திக்கப் போனபோது,

" காத்தான்குடியிலிருந்து சில முஸ்லிம் பொடியங்கள் சிறைக்கு வந்திருக்கிறாங்கள். அவர்கள் வித்தியாசமாக இஸ்லாம் மார்க்கத்தைபற்றிக் கதைக்கிறார்கள். நீயும் அவர்களைப் போய்க் கதை என்று சொன்னார் பிள்ளையான். சிறைப்பொறுப்பதிகாரி அக்பரின் அனுமதியோடு, நானும், பிள்ளையானும் சிறையில் இருந்த சைனி மௌலவியைச் சந்தித்தோம். அவர் சஹ்ரானின் சகோதரர். அந்தச் சந்திப்பின் பின்னர்,

"இவங்கள் கடும் விஷயமான ஆக்கள். என்னுடைய அறையில் தான் இருக்கிறார்கள். நான் இவர்களுக்கு புலிகளின் தற்கொலைத் தாக்குதல் முறை பற்றிப் படிப்பிச்சிருக்கிறன். இவங்கள் வழக்கு முடிந்து வெளியில் வருவாங்கள். கஷ்டத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வம். அவர்கள் பின்பு எங்களுக்கு உதவி செய்வார்கள்.சைனி மௌலவியின் மனைவியின் தம்பியிடம் ரூபா 50000 கொடு என்று பிள்ளையான் சொன்னார். (இலங்கையில் புலிகளிடம் மட்டுமே தற்கொலைத்தாக்குதல் நடத்தும் தொழினுட்பமுறைமை இருந்தது. எனவேதான் அந்தப் பயிற்சிகளை பிள்ளையான் சஹ்ரான் கும்பலுக்கு வழங்கியிருக்கிறார். அவர்களும் இந்தப் பயிற்சியைப் பெறுவதற்காகவே கைதிகள் போல இந்தச் சிறைச்சாலைக்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும்)

நான் வெளியில் வந்ததன் பின், அடுத்தநாள் சைனி மௌலவியின் மச்சான் தொலைபேசி எடுத்தார். நான் எங்கள் காரியாலயத்துக்கு வரச்சொல்லி, அவருக்கு ரூபா 50000 கொடுத்தேன்.

பிள்ளையான் சிறையில் இருந்தபோதே, சுரேஷ் ஷாலேயோடு 2 முறை தொலைபேசியில் கதைத்து இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு மணித்தியாலமாக நடந்த சதியாலோசனை



2017 செப்ரெம்பர் முதற்கிழமை .

சுரேஷ் ஷாலே சொன்னார், "பிள்ளையானைச் சந்திப்பதற்கு ஓர் ஆளை அனுப்புகிறேன். அவரைக் கூட்டிக்கொண்டுபோ. அவரின் பேர் சில்வா. அவர் ஆரென்று ஒருத்தருக்கும் தெரியக்கூடாது. சிறைப்பொறுப்பதிகாரியோடை கதைச்சுப் போட்டு பிள்ளையானின் நண்பன் என்றும், அவர் வழக்குக்கு நிதிஉதவி செய்பவர் என்றும் சொல்லு"

மறு நாள்காலை நானும் அவரும் என்னுடைய வாகனத்தில் சிறைச் சாலைக்குப் போனோம். சில்வா அட்சரம் பிசகாமல் தமிழ் நன்றாகக் கதைத்தார். சிறைச்சாலைக்குள் போவதற்கு என்னுடைய பேரில் பதிந்து கூட்டிக் கொண்டு போனேன். 20 நிமிடம் கதைப்பதற்கு அனுமதி தந்தார்கள். ஆனால் 20 நிமிடம் கதைக்கப் போனவர் 2 மணித்தியாலங்கள் ஆகியும் கதையை நிறுத்தவில்லை. சிறைக்காவலாளி தனக்குப் பிரச்சினை வரப்போகுதென்று பயப்படத் தொடங்கினார். அதனால், நாங்கள் இங்கிதம் பாராமல் அறைக்குள் புகுந்ததன் பின்னர்தான் கலந்துரையாடல் நிறுத்தப் பட்டது. சில்வாவைத் தங்களின் ஆள் என்று சுரேஷ் ஷாலே சொன்னதிலிருந்து அவர் இராணுவத்தில் கடமைபுரியும் ஒருவராக இருக்க வேண்டும் என்று யூகித்துக்கொண்டேன். சிறையால் வெளியில் வந்தவர் அப்படியே சென்றுவிட்டார்.

சில்வா வந்து போன பிறகு " இவங்கடை ஆட்களைப் பிணை எடுக்க வேண்டும். காசு கொஞ்சம் ஒழுங்கு பண்ணுங்கோ. இரண்டரை லட்சமளவில் வேண்டும். சுரேஸ் ஷாலேயிட்டைக் கேளுங்கோ" என்று பிள்ளையான் சொன்னார். நான் சுரேஷ் ஷாலேயிடம் விடயத்தைச் சொன்னேன். செப்ரெம்பர் மாதச் சம்பளத்தோடு சேர்த்து இரண்டரை லட்சம் ரூபா மேலதிகமாகத் தரப்பட்டது.

நான் அந்தக் காசை சைனி மௌலவியின் மச்சானிடம் கொடுத்தேன். பின்பு பிணை எடுப்பதற்கு ஓட்டமாவடி சட்டத்தரணி றாசிக்கை ஒழுங்குபடுத்திக் கொடுத்தேன். அவர்கள் 24.10.2017 பிணையில் வெளியில் வந்தார்கள்.




## சஹ்ரான் கும்பலைச் சந்தித்த சுரேஷ் ஷாலே

2018 ஜனவரி கடைசியில் இந்தப் பிணையில் வந்தவர்களைச் சுரேஷ் ஷாலே சந்திக்க விரும்புவதாகப் பிள்ளையான் சொன்னார்.

"இந்தக் கலந்துரையாடலுக்கு ஒழுங்குபடுத்திக் கொடுங்கோ. நீயும் போ . ஆனால் உன்ர வாகனத்தில போகாதை. இராணுவ வாகனத்தில் உன்னைக் கூட்டிக் கொண்டு போவாங்கள். உன்ரை வாகனத்தை நேரே மட்டக்களப்புக்குப் போகும்படி அனுப்பிவிடு. ஏனென்றால் உனது வாகனச் சாரதிக்குக்கூட இந்த விடயம் தெரியக் கூடாது"என்றும் பிள்ளையான் சொன்னார்.

நான் எனது வாகனத்தை மட்டக்களப்புக்குப் போகும்படி அனுப்பி விட்டுக் காத்திருந்தேன். எனது தெகிவளை வீட்டுக்குப் பக்கத்தில் இராணுவ வாகனம் ஒன்று வந்து நின்றது. நான் முதல்நாளே, சைனி மௌலவிக்குப் போன் பண்ணி 'ஒரு மீற்றிங் இருக்கு. நீங்கள் உங்கடை ஆட்களைக் கூட்டிக் கொண்டு வாருங்கோ' என்றேன். அதற்கு அவர் 'எனக்குப் பிள்ளையான் ஏற்கனவே தொலைபேசியில் சொல்லிவிட்டார்.நாங்கள் கட்டாயம் வருவம்' என்றார். சொற்ப நேரத்தில் சுரேஷ் ஷாலே தொலைபேசி எடுத்தார் 'நான் வந்து கொண்டிருக்கிறேன். அனைவரும் வாறது உறுதிதானே?' என்று கேட்டு உறுதிசெய்தார்.

புத்தளம்நோக்கி இராணுவ வாகனம் போய்க்கொண்டிருந்தது. ஈற்றில் புத்தளம் வனாத்துமுல்லைப் பகுதியில் தென்னமரங்கள் சோலைபோல் அடர்ந்து வளர்ந்திருந்த மிகப்பெரிய தோட்டத்தினூடாகச் சென்றது. அதன் மூலையில் ஒரு சிறிய பங்களா இருந்தது. அங்கே வெள்ளை றொயோற்றோ கார் ஒன்று இருந்தது. அந்தக் காரின் கறுப்புக் கண்ணாடிகள் உள்ளே இருப்பவர்களை இனங்காண விடாமல் தடுத்தது. என்னை அந்தக் காருக்கு அருகில் இறக்கிவிட்டு வாகனம் போய்விட்டது.

றொயோற்றா காரில் இருந்து சுரேஷ் ஷாலே இறங்கினார். கை குலுக்கிய பின் கதைத்தார். சைனி மௌலவிக்குப் போன் பண்ணிக் கேட்டபொழுது , 'நாங்கள் குருநாகலில் வந்துகொண்டு இருக்கின்றோம்' எனச் சொன்னர். ஏறத்தாழ அரை மணித்தியாலத்தின் பின்னர் வாகனமொன்றில்அவர்கள் 6 பேர் வந்து அவர்களில் எனக்கு சைனி மௌலவி ஒருவரை மட்டும்தான் தெரியும். வாகனம் வரும்பொழுது சுரேஷ் ஷாலே தனது காருக்குள் ஏறிவிட்டார். சைனி மௌலவி எனக்கு 'சலாம்' சொல்லிவிட்டு தனது சகோதரரை அறிமுகப்படுத்தினார். அப்போதுதான் அந்த நபரைக் கவனித்தேன். அந்த நபர் எனக்கு சலாம் சொல்லிவ்விட்டு 'என் பெயர் சஹ்ரான்' என்று சொன்னார். சஹ்ரானோடும் கைகுலுக்கி சிறிதுநேரம் கதைத்துக் கொண்டிருந்தேன். அதுதான் முதலும் கடைசியுமான சஹ்ரானுடனான சந்திப்பு.

அதற்குப் பிறகுதான் சுரேஷ் ஷாலே காரில் இறங்கினார். சுரேஷ் ஷாலேக்கு'இவர்தான் சஹ்ரான் மௌலவி' என்றும், 'இவர் சுரேஷ் ஷாலே. பழைய இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர். இப்போது மலேசியாவின் இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்புடன் இணைக்கப்பட்டுள்ளார்' என்று சஹ்ரானுக்கும் மாறி மாறி அறிமுகப்படுத்தினேன். உடனேயே 'இவரைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்' என்று சஹ்ரான் சொன்னார். உடனேயே அவர்கள் எல்லோரும் வீட்டுக்குள்ளே நுழைந்தார்கள். வீட்டுக்குள்ளே கதிரைகள் போட்டு எல்லாம் கூட்டம் நடப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நான் உள்ளே போகவில்லை. என்னை அவர்கள் கூப்பிடவும் இல்லை. நான் வெளியில் நின்றிருந்தேன். கூட்டம் 3 மணித்தியாலங்களுக்கு மேல் நடைபெற்றது. நான் வெளியிலே காத்துக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென சஹ்ரான் 'தொழுகைக்கு நேரம் ஆகிவிட்டது .எல்லோரும் தொழுவோம் 'என்று சொன்னார். என்னையும் கூப்பிட்டார். நானும் அவர்களோடு சேர்ந்து தொழுதேன்.

## பிள்ளையானின் விடுதலைக்கு கோத்தா வெல்வது அவசியம்

கூட்டம் முடிந்த பின்னர் சுரேஷ் ஷாலே என்னைத் தனியாகக் கூப்பிட்டார்.

" பிள்ளையான் சிறையிலிருந்தும் ,வழக்கிலிருந்தும் வெளியிலை வாறதென்றால் கோத்தாபய ஜனாதிபதியாக வந்தால் மாத்திரம்தான் முடியும். இல்லாவிட்டால் பிள்ளையான் மட்டுமல்ல எல்லோரும் உள்ளே போக வேண்டி வரும். இந்த மீற்றிங் பற்றி யாருக்கும் தெரியக்கூடாது " என்று கண்டிப்பான குரலில் சொன்னார். என்னை ஏற்றிக் கொண்டு போக வாகனம் வந்தது. நான் அந்த வாகனத்தில் மட்டக்களப்புக்குப் போனேன். அடுத்தநாள் பிள்ளையானைச் சந்தித்து கூட்டத்தில் நடந்த விபரங்கள் எல்லாவற்றையும் சொன்னேன். அதைக் கேட்ட பிள்ளையான்,

" கோத்தாவை வெல்ல வைக்கிறதுக்கு சுரேஷ் ஷாலே பெரிய பிளானில் வேலை செய்கிறார். நாங்கள் அதுக்கு உதவி செய்ய வேணும். அப்பதான் நான் வெளியிலை வரலாம். ஆனால் இதுபற்றி ஆருக்கும் தெரியக் கூடாது" என்று அவரும் எச்சரிக்கைத்தொனி [illegible]

## வெடித்தன குண்டுகள்

2017 செப்ரெம்பரில் எங்கள் எல்லோரையும் சந்திக்க கோத்தாபய வரச் சொன்னார். அவரது வேண்டுகோளுக்கு இணங்க எங்கள் கட்சியினர் எல்லோரும் போய் அவரது கொழும்பு கொகுவலை வீட்டில் சந்தித்தோம். நான், கட்சிச் செயலாளர் பிரசாந்தன், பொருளாளர் தேவராஜ், இனியபாரதி ஆகியோர் கொகுவலை வீட்டுக்குப் போனபோது அங்கே தேசிய புலனாய்வுத்துறையின் ஓய்வுபெற்ற தலைவர் கபில ஹெந்தவிதாரணவும் இருந்தார். அந்தக் கூட்டத்தில் "நான் ஜனாதிபதித் தேர்தலில் வென்றால்தான் பிள்ளையானை விடுவிக்க முடியும். முழுமையாக வேலை செய்யுங்கோ" என்று கோத்தாபய அழுத்திச் சொன்னார். கோத்தாபயவோடான கூட்டம் நடந்து சுமார் 2 மாதத்துக்குப் பிறகு, சுரேஷ் ஷாலேயும் சஹ்ரானும் வனாத்துமுல்லையில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் பின்னர் 14 மாதங்களின் கடந்து ஈஸ்டர் நாளில் 21.04.2019 அன்று தற்கொலைக்குண்டு வெடிப்பு இலங்கையில் நடந்தது.

இந்தக் குண்டு வெடிக்கும்போது நான் மட்டக்களப்பில் இருந்தேன்.
270 பேர் கொல்லப்பட்டார்கள்.
500 பேருக்கு மேல் படுகாயமடைந்தார்கள்.
சியோன் தேவாலயத்திலும் தற்கொலைக் குண்டுகள் வெடித்தன.
சியோன் தேவாலயம் எமது கட்சிக் காரியாலயத்திலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தது.
அந்தன்று அதை யார் செய்தார்கள் என்று எமக்குத் தெரியாது. நாடுமுழுவதும் பதற்றமாக இருந்தது. நடந்தது தற்கொலைக் குண்டுத்தாக்குதலா அல்லது கிளைமோர் தாக்குதலா என்று தெரியாமல் வதந்திகள் பரவிக் கொண்டிருந்தன. நான் உடனடியாகப் பிள்ளையானைச் சந்திக்க 11 மணிக்குப் போனேன். பிள்ளையானுக்கு நான் போவதற்கு முன்னர் சிறைக்காவலர் சொல்லி எல்லாம் தெரிந்திருந்தது. அருகில் எவரும் இல்லாத தருணத்தில், " இது நம்முடைய சுரேஷ் ஷாலேயின் கூட்டாளிகளுடைய வேலையாகத்தான் இருக்கும். இது நமக்கு நல்லது. அரசாங்கம் எப்படியும் மாறும்." என்று மகிழ்ச்சியோடு சொன்னார். அதுக்குப்பிறகு 2019 ஏப்ரல் 22 ஆம் திகதி சஹ்ரான்தான் குண்டை வெடிக்கப் பண்ணினார் என்ற செய்தி வெளிவந்தது.
2019 ஏப்ரல் 23 ஆம் திகதி கல்முனையில் இராணுவம் சஹ்ரான் குழுவின் வீட்டைச் சுற்றி வளைக்கவே சஹ்ரானின் தம்பிகளான சைனி மௌலவி, றில்வான், சஹ்ரானின் வாப்பா ஹாசிம், சைனியின் மனைவி ஆகியோர் இராணுவத்தோடு சண்டை பிடித்து ஈற்றில் தற்கொலைக் குண்டை வெடிக்க வைத்துச் செத்தார்கள். சஹ்ரானின் மனைவியும் ஒரு பிள்ளையும் தப்பி விட்டார்கள். இவர்களின் மரணித்த உடலத்துக்கு உரிமை கோர ஒருவரும் வரவில்லை. இவர்களது பிணங்களை முஸ்லிம் சுடலைகளிலே புதைக்க விடவில்லை.

## யாருக்கும் சொல்லாதே!

இந்தச் செய்திகள் வந்தவுடன் போட்டோக்களைப் பார்த்தவுடன் எனக்குப் பயம் வரத்தொடங்கியது. நாங்கள் சந்தித்த அதே ஆட்கள். ஏற்கனவே குறூப் போட்டோவும் தயாரித்து வைத்திருந்தார்கள். சுரேஷ் ஷாலே சந்தித்த ஆட்கள்தான் இவர்கள். எனக்குப் பயம் மிகுதியாகியது. பிள்ளையானைப் போய் 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி சந்தித்தேன்.
"என்ன நடக்கிறது? எல்லாம் தற்கொலைத் தாக்குதல்..." என்று என் சந்தேகத்தைச் சொன்னேன்.
"அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. இதைப் பற்றி ஒன்றும் தேவையில்லாமல் யாருடனும் கதைக்காதே" என்றார்.

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உயிரை மாய்த்தலும் வாழ்வை நேசித்தலும்

மருத்துவர் எஸ். சிவதாஸ்
உளமருத்துவ நிபுணர்
யாழ். போதனா மருத்துவமனை

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரம் வரையில் யாழ்ப்பாணத்தில் 18 வயதுக்கு உட்பட்ட 11 பேர் தவறான முடிவை எடுத்து தமது உயிர்களை மாய்த்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸாரின் புள்ளிவிபரம் ஊடாகவே இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

இன்று எமது பிரதேசத்தில் தங்களது உயிரை மாய்த்துக்கொள்கின்ற செயற்பாடுகள் மிகவும் அதிகரித்துள்ளன. இந்தச் செயற்பாடுகள் அதிகரிப்பதனைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் அதன் சிக்கலான நிலைமையினை விளங்கிக்கொள்வது இன்றியமையாததாகும். அத்துடன் இதனை விஞ்ஞானபூர்வமாக விளங்கிக்கொள்ளுதல் அவசியமாகும்.

மனித வரலாற்றில் உயிரை மாய்த்துக்கொள்கின்ற நிகழ்வுகள் வரலாறு முழுவதும் நிரம்பிக் காணப்படுகின்றன. அதனை தியாகம் என்றும் கோழைத்தனம் என்றும் ஒவ்வொருவரும் தங்களுக்குரிய கருத்துருவம் சார்ந்து ஏற்றுக்கொள்கின்றனர்.

உலகில் பொதுவாகவே வயது சென்றவர்கள் அல்லது முதியவர் தங்களது உயிரை மாய்ப்பதே அதிகமாகப் பதிவாகியுள்ளது. எனவே வயது ஒரு நிர்ணயக் காரணியாக அமைந்து விடுகிறது. ஆனால் இலங்கை, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் இளவயதினர் உயிரை மாய்த்துக்கொள்வது அதிகரித்துள்ளது. ஜரோப்பிய நாடுகளில் இளையோர் உயிரை மாய்த்துக்கொள்வது குறைவடைந்து காணப்படுகின்ற போதும் ஏனைய நாடுகளில் இது பொதுவாக பெருமளவு அதிகரித்தே செல்கின்றது.

இதில் இளவயதினர் அதிகமாக உயிரைமாய்ப்பது எமது சமூகத்தில் பல விளைவுகளை ஏற்படுத்தவல்லது. உயிர்களை இழக்கின்றமை என்பதனையும் தாண்டி உள சமூகப் பிரச்சினைகளை இவை ஏற்படுத்துகின்றன. அது சமூக பொருளாதார செயற்பாடுகளுக்கும் குந்தகத்தை ஏற்படுத்துகின்றது. இதைவிட ஒரு குறிப்பிட்ட பகுதியில் மற்ற இடங்களைவிட உயிர்மாய்த்தல் அதிகரித்து காணப்படுவதென்பது அந்தச் சமூகத்தின் பொது உளச்சுகம் குன்றியுள்ளமையும் அந்தச் சமூகத்தில் உளச்சமூக ஆரோக்கியம் பெரிதும் பாதிக்கப்படுவதையும் பிரதிபலிக்கின்றது.

இளையோர் பலர் இன்றைய சமூகத்தில் தங்களைப் பற்றி தாழ்ந்த கணிப்பினைக் கொண்டிருப்பது மிக முக்கியமான உளவியல் பிரச்சினையாக அமைந்துள்ளது. அதிக விமர்சனங்களுக்கு உட்படுவதும் பெற்றோர் ,ஆசிரியர்களால் அவர்களது செயற்பாடுகள் தாழ்த்தி விமர்சிக்கப்படுவதும் இத்தகைய உளவியல் பிரச்சினைக்குக் காரணமாக அமைந்துவிடுகிறது. சிலர் இயல்பாகவே தாழ்ந்த தற்கணிப்பினைக் கொண்டுள்ளனர். தங்களைப் பற்றிய சரியான கணிப்பினை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் அது அவர்களுக்கு தாழ்வுமனப் பான்மையை ஏற்படுத்தி விடுகின்றது. இதனால் அவர்கள் தங்களையே வெறுக்கக் கற்றுக் கொள்கிறார்கள். தங்களையே ஏற்றுக் கொள்ளாதவர்களால் பிறரை ஏற்றுக்கொள்ள முடியாமல் போகிறது.

அடுத்த மிகமுக்கியமான உளவியல் காரணி அதிகம் உணர்ச்சிவசப்படுதல். நிதானம் இழந்து திடீரென உணர்ச்சிவசப்படும் நிலைமை பெருமளவில் இந்தப்பருவத்தினர்களிடம் காணப்படுகிறது. இதனால் பலர் தற்கொலை முயற்சிக்குச் செல்கின்ற நிலைமை தோன்றுகின்றது. இந்தப்பருவத்தினர் பலர் தற்கொலை செய்து கொண்ட விடயங்களை ஆராய்வோமாயின் அவை உடனடி உணர்ச்சிக் கொதிநிலையில் எடுத்த மோசமான முடிவாக அமைந்துள்ளதைக் காணலாம்.

இலங்கையில் 90 களின் நடுப்பகுதியில் தற்கொலை செய்துகொள்வதன் எண்ணிக்கை அதிகமாக (வருடத்தில் கிட்டத்தட்ட 45/100,000 என்ற விகிதத்தில்) காணப்பட்டது. உயிர் மாய்ப்போர் விகிதத்தில் முன்னிலையில் இருந்த நாடுகளில் இலங்கையுமொன்றாக இருந்தது.

அந்தக்காலத்தில் சந்திரிகா, ஜனாதிபதியாக இருந்த போது நிபுணத்துவக்குழு ஒன்றை அமைத்து இதை குறைப்பதற்கான பரிந்துரைகளை உருவாக்கினார் அதில் இலங்கை போன்ற நாடுகளில் விவசாயம் முதன்மையாகக் காணப்படுகின்றமையால் பூச்சிநாசினிகளை உட்கொண்டு உயிரை மாய்த்துக் கொள்வது அதிகரித்துக் காணப்பட்டமையால் பூச்சிநாசினிகளின் நச்சுத்தன்மை சார்ந்து சில விதிமுறைகளை ஏற்படுத்தியதால், அதன் மூலம் பெருமளவு உயிர்கள் காக்கப்பட்டன. அத்துடன் சமூக உட்கட்டமைப்புக்களும் மருத்துவ வசதிகளும் நாட்டில் அதிகரித்துச் சென்றமையும் இதற்கு மேலும் வலுச் சேர்த்து. இன்று இலங்கையின் தற்கொலை விகிதம் வருடத்திற்கு 14 15/100,000 குறைந்து காணப்படுகிறது. இதன் மூலம் எமது சமூக வளம் பேணப்படுகிறது என்றால் மிகையாகாது.

அண்மைக்காலமாக எமது பிரதேசத்தில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் மீண்டும் உயிர்மாய்ப்புச்சம்பவங்கள் அதிகரித்து, தலைவிரித்தாடுகின்றன. பல உயிர்களை இழந்து ஏற்கனவே சமூகவளம் குன்றிய பிரதேசம் பலவிதமாக பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றது. இங்கு வருடத்திற்கு 2830/100,000 என்ற விகிதத்தில் இப்போதும் உயிர்மாய்ப்பு காணப்படுகிறது. இது இலங்கையில் மற்றைய பிரதேசங்களில் காணப்படுகின்ற விகிதத்தினை விட இருமடங்காகும். சமூகத்தின் பொது உளசுகம் பாதிக்கப்பட்டிருப்பதையே இது பிரதிபலிக்கிறது என்பதே யதார்த்தம். இது எமது சமூகத்தின் உளசமூக ஆரோக்கியமின்மையைப் பிரதிபலிப்பதுடன் இதன் விளைவாக உளச்சமூக ஆரோக்கியம் மேலும் பாதிப்படைகின்ற ஒரு சுழற்சிப் போக்கையே அவதானிக்கமுடிகின்றது. இதனை நாம் விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து, அதற்குரிய நிபுணர் குழுவை அமைத்து கையாளத்தவறின் மனிதவளம் குன்றி, தாழ்ந்த பொது உளச்சுகம் கொண்டு, சரிவை நோக்கி நம் சமூகம் செல்வதைத் தடுத்து நிறுத்த முடியாது போகலாம். உலகில் ஆண்டுக்கு பத்து லட்சம் பேர் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். அதனைவிட இரண்டு அல்லது மூன்று மடங்கு மக்கள் அத்தகைய முயற்சியில் ஈடுபடவும் செய்கின்றனர். ஆனால் இத்தகைய உயிர் மாய்ப்புகளும், அதற்கான முயற்சிகளும் பொதுவாக பல காரணிகளால் தீர்மானிக்கப்படுபவையாகவும் வெவ்வேறு நாடுகளில், பிரதேசங்களில் உள்ள பிரத்தியேக சூழமைவுகளால் உருவாகின்றவையாகவும் காணப்படுகின்றன. இதில் முக்கியமாக உயிரை மாய்த்துக்கொள்பவர்களில் 80 வீதமானோர் கீழ் மற்றும் நடுத்தர வருமானம் பெறுவோராகவே உள்ளனர். கிட்டத்தட்ட 60 வீதமான தற்கொலைகள் ஆசிய நாடுகளில் நிகழ்கின்றன.

இத்தகைய தற்கொலை மனோநிலைக்கு, பல காரணிகள் இட்டுச் செல்கின்றன. இவற்றில் உயிரியல், மற்றும் ஆளுமைக் காரணிகள் பிரதான பங்குவகிக்கின்றன. இளையோரின் சிந்தனைப் பிறழ்வுகளும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன. இவற்றை விட உளச்சமூகக் காரணிகளும் தாக்கம் செலுத்துகின்றன. பல ஆய்வுகள் மூலம் நிரூபணமான உளச்சமூகக் காரணிகள் சில வருமாறு

1. தாழ்ந்த சமூக பொருளாதார நிலை
   Social depirvation
2. ஆரோக்கியமற்ற குடும்பநிலை
   Family adversity
3. 3. பாதகமான வாழ்க்கை நிகழ்வுகள்
   Negaitve life events
4. நபரிடைக் காரணிகள்
   Interpersonal factors
5. உளவியல் காரணிகள்
   Psychological factors

மேற்குறிப்பிட்டவற்றுள் உடனடியாக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது தலையீடு மூலம் சீர் செய்யக்கூடிய காரணிகளுள் முக்கியமானவையாக ஆரோக்கியமற்ற குடும்பநிலையும் மனவளம் குன்றிய திறன்களற்ற நிலையுமே உள்ளன. இத்தகைய தற்கொலை முயற்சிகளை மேற்குறிப்பிட்ட காரணிகளைச் சீர்செய்வதன் மூலம் குறைக்கமுடியும்.

வறுமை, வேலை வாய்ப்பு இன்மை, பின்தங்கிய சமூக வாழ்க்கைத் தரம் என்பன இதில் தாக்கம் செலுத்துகின்றமையும் ,நிர்ணயக் காரணிகளாக அமைந்துள்ளமையும் தெளிவாகத் தெரிகின்றது. வறுமையும் வேலையின்மையும் உயிரை மாய்த்துக்கொள்வதில் பிரதான பங்குவகிப்பதை நாம் மறுதலித்துவிட முடியாது. இவ்வாறு தம் உயிர்களை மாய்த்துக்கொள்கிற ஆண், பெண் விகிதம் என்பது ஆசிய நாடுகளில் மற்றைய நாடுகளில் காணப்படுவதை விட வேறுபட்டே காணப்படுகின்றது. பொதுவாக உலகளவில் தற்கொலை செய்துகொள்பவர்களில் ஆண் 4:1 என்ற விகிதத்தில், அதாவது 4 ஆண்களுக்கு ஒரு பெண் என்ற ரீதியில் தற்கொலைகள் நடக்கின்றன. ஆனால் ஆசிய நாடுகளில் இது கிட்டத்தட்ட 3:2 என்ற விகிதத்தில் 3 ஆண்களுக்கு 2 பெண்கள் என்ற வகையில் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே பெண்கள் தமது உயிரை மாய்த்துக் கொள்கின்றமை ஆசிய நாடுகளில் பெருமளவு அதிகரித்துக் காணப்படுகின்றமை ஆய்வுகள் மூலம் நிரூபணமாகியுள்ளது.

பெண்களின் பொது உளச்சுகம் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கின்றமையும் அவர்கள் பல உளச் சமூக நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றமையும் இதன்மூலம் தெரிய வருகிறது. பெண்களில் வாழ்க்கைத்தரம் தாழ்ந்துள்ளமை, அவர்கள் பொருளாதாரசுமை, வன்முறைக்கு முகம்கொடுத்தல், அவர்களின் சமூக, குடும்ப வகிபாகம் சிக்கலான நிலையினை அடைந்துள்ளமை என்பன உயிர்மாய்ப்புகளுக்கு காரணமாக அமைகின்றன. எனவேதான் பெண்களின் மேம்பாடு என்பது தற்கொலைகளைத் தடுப்பதில் பெரும் பங்குவகிக்கும் என்பது தெளிவாகிறது.

பெரும்பாலான பெண்கள் தனிமையில் வாழ்பவர்களாக காணப்படுகின்றனர். அவர்கள் பொதுவாக திருமணம் செய்யாதவர்களாக அல்லது திருமண முறிவு ஏற்பட்டு விவாகரத்துப் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். வாழ்க்கைத்துணையை இழந்த ஆண்களும் அதிகளவில் தம் உயிரை மாய்த்துக்கொள்வதாக ஆய்வுகள் காட்டி நிற்கின்றன. அண்மைய காலங்களில், இழப்புக்களை சந்தித்த ஆண்கள் அதிகமாக தம் உயிரை மாய்த்துள்ளமை ஆய்வுகளில் தெரியவருகிறது. மிக முக்கியமாக தனிமையில் வாழ்தல், மதுப் பாவனை காரணமாக ஒதுக்கி வைக்கப்படுதல் என்பன ஆண்கள் தற்கொலைக்கு முயல்வதற்கான ஏதுநிலைகளை அதிகரிக்கின்றன.

**தற்கொலைக்கான உள மருத்துவக் காரணிகள்**

1. மனச்சோர்வு நோய்
2. ஆளுமைக்குறைபாட்டு நோய்கள்
3. மதுபானம் மற்றும் போதைப் பாவனைகள்
4. உளப்பிளவு நோய்
5. மிகைத்துடியாட்டம் கவனக்குவிப்பு குறைவு நோய்

(07 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஹ்ரான் குழுவுக்கு....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் 6 லட்சம் வாக்குகளோடு கோத்தாபய ஜனாதிபதியானார்.

சுரேஷ் ஷாலே இலங்கையில் அரச புலனாய்வுச் சேவை இயக்குநராக நியமிக்கப்பட்டார். அதுவரைக்கும் அந்தப் பதவிக்கு ஓர் இராணுவ வீரர் நியமிக்கப்பட்டதில்லை.

இதன் பின்பு பிள்ளையானை விடுவிக்கச் சொல்லி பஸில் ராஜபக்சவிடம் நாங்கள் தாழ்மையுடன் கேட்டோம். பஸில் சொன்னார் 'சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பிள்ளையானை விடக்கூடாது என்பதிலே மிகக் கடுமையாக நிற்கிறார். நீங்கள் வழக்கை மேல்முறையீட்டுக்குக் கொண்டு போங்கோ. நான் ஒரு நீதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடி அவர் உங்களுக்கு உதவி செய்வார் ' என்று சொன்னார். அவர் அந்த நீதிபதியின் பெயரையும் தொலைபேசி எண்ணையும் தந்து அவரைப் போய் சந்திக்கும்படி சொன்னார். பின்னர் நாங்கள் நினைத்தபடி எல்லாமே துரிதகதியில் நடந்துகொண்டிருந்தன.

ஒக்ரோபரில் வழக்குத் தீர்ப்பு சாதகமாக வந்தது. சட்டமா அதிபர் டப்புல டி லிவேரா "தீர்ப்புக்கு எதிராக சுப்ரீம் கோட்டில் மேன்முறையீடு பண்ணப் போகிறன். எங்களிடம் இன்னும் முறையான ஆதாரங்கள் இருக்கு" என்றார்.

24.11.2020இல் பிள்ளையானுக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியது. அதற்குப் பிறகு 2021 ஜனவரி 13 ஆம் திகதி சட்டமா அதிபர் எல்லா வழக்கையும் இல்லாமற்செய்தார். அந்தவழக்கு இத்தோடு முடிந்தது. அதன் பின்னர் பிள்ளையானின் வழக்கு ஆவணங்கள் எல்லாம் இல்லாமற் போய்விட்டன.

## மிரட்டிய சுரேஷ் ஷாலே

15.10. 2021 ஆம் திகதி .

சுரேஷ் ஷாலே என்னைத் தொலைபேசியில் அழைத்தார். முற்பகல் 10 மணிக்குப் போனேன். அன்றைக்கு வழமைக்கு மாறாக என்னுடைய கைபேசியைப் பாது காவலர் வாங்கிய பின்னரே உள்ளே அனுமதித்தாங்கள். சுரேஷ் ஷாலே தனது அறைக்குள் வைத்துத் தனது லாப் ரொப்பை 'ஓன்' பண்ணினார்.

அதில் ஹரீன் பெர்னாண்டோ, ஆயர் மல்கம் ரஞ்சித், ஆயர் சிறில் காமினி நளின் பெர்னாண்டோ எம்.பி. ஆகியோரின் வீடியோக்கள் இருந்தன. அதில் ' ஈஸ்டர் தாக்குதல் கோத்தாபயவை ஜனாதிபதியாக்குவதற்கே நடத்தப்பட்டது. இதில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பங்களிப்பு உண்டு. சஹ்ரான் இராணுவப் புலனாய்வுப் பிரிவோடு தொடர்பில் இருந்தார். இதில் இப்போது தேசிய பாதுகாப்புப் புலனாய்வுச் சேவை இயக்குநராக இருக்கும் சுரேஷ் ஷாலே சம்பந்தப்பட்டிருக்கிறார். இதைப்பூரணமாக ஆராய வேண்டும்' என்று உரையாற்றிய காட்சிகள் இருந்தன.

அதைக் காட்டிய பின்னர்,

"இது பற்றி உனக்கு ஏதும் தெரியுமோ? " என்று என்னிடம் சுரேஷ் ஷாலே கேட்டார்.

"ஹரீன் பெர்னாண்டோ பேசியது பேப்பரில் வந்தது. மற்றயவை எனக்குத் தெரியாது " என்று சொன்னேன்.

"நான் சஹ்ரானைச் சந்தித்தது எனக்கும் உனக்கும் பிள்ளையானுக்கும் தான் தெரியும். பிள்ளையானுக்கு சில விடயங்கள் தெரியாது. அப்படியானால் நீதான் சொல்லியிருக்க வேண்டும்" என்று சந்தேகத்தோடு கேட்டார்.

அதன் பின்னர் என்னைக் கடுமையாக விசாரித்தார். நான் அது பற்றி யாரோடும் கதைக்கவில்லை. என்னுடைய கைத்தொலைபேசியை வாங்கினார். நான் கடவுச்சொல்லைக் கொடுத்தேன். என்னுடைய கைத்தொலைபேசியைப் பூரணமாகச் சோதனை செய்தார். 2007 இல் இருந்தே அவரை எனக்குத்தெரியும். ஆனால் என்னோடு அவர் மிகக் கடுமையாக இருந்தது இம்முறைதான். 10 மணிக்குப் போனேன். 1 மணிக்குத்தான் வெளியே விட்டார்.

இவர் என்னைக் கடுமையாகச் சந்தேகிக்கிறார் என்று எனக்கு விளங்கி விட்டது. வெளியே வந்து பிள்ளையானுக்குத் தொலைபேசி எடுத்தேன்.

"சுரேஷ் ஷாலே என்னைக் கூப்பிட்டுக் கடுமையாக விசாரித்தார். சந்தேகப்படுகிறார். எனக்குப் பயமாகக் கிடக்கு." என்றேன்.

" நீ யாரோடையும் இதைப்பற்றிக் கதைச்சனியோ? சரி அதை விடு. நான் இரவு கொழும்பு வாறன்" என்று பிள்ளையான் சொன்னார். அவர் கொழும்புக்கு வந்தால், நான் தான் மீற்றிங் எல்லாம் ஏற்பாடு செய்வேன். அன்று அதொன்றும் தேவையில்லை என்று சொல்லிவிட்டார். ஆனால் எனக்கு அப்படிச் சொல்லிவிட்டு அவர் இரகசியமாகப் பிள்ளையான் , கொழும்புக்கு வந்ததும் சுரேஷ் ஷாலேயைச் சந்தித்திருக்கிறார். அதன் பிறகும் அவர் எனக்கு அதைச் சொல்லவில்லை. ஆனால் பிள்ளையானின் சாரதி அமலன் மூலமாக நான் விடயத்தை அறிந்துகொண்டேன். பிள்ளையானும் என்னைச் சந்தேகிப்பது புரிந்தது.

'இனியும் இங்கிருந்தால் ஆபத்து' என்று உணர்ந்து கொண்டேன். அதனால் சொல்லாமல், கொள்ளாமல் நானும், குடும்பத்தினரும் இந்தியா வந்துசேர்ந்தோம். பின்னர் அங்கிருந்து பல தடவைகள் முயன்று, தோற்று, இறுதியில் ஏஜென்ஸி மூலமாக சுவிஸுக்கு வந்து சேர்ந்தேன்"



# உளர்ந்தினம்

பாகம் 2

04

○ இராகவன்



பொதுவா கணிதம், ஆங்கிலம் படிப்பிக்கிற வாத்திமாரைக் கண்டால் அநேகமான பொடியளுக்கு வயித்தைக் கலக்கும். ஆனால் எனக்கு அந்தச் சங்கீத ரீச்சரைக் கண்டாலும் வயித்தைக் கலக்கிச்சுது. அதுக்கு முக்கியமா இரண்டேரண்டு காரணந்தான். முதலாவது காரணம், அந்த ரீச்சர் கொண்டு வாற சுருதிப் பெட்டியை நாங்கள்தான் சுருக்கி விரிக்கோணும் அல்லது விரிச்சுச் சுருக்கோணும். அது ஒரு றேடியோ சைசில மெல்லிய பிறவுண் கலரில குட்டிச்சாத்தான் மாதிரியிருக்கும். சங்கீத வகுப்புத் தொடங்கேக்குள்ள ஆராவது ஒராளிட்ட அதைக் குடுத்து வாசிக்கச் சொல்லுவா.

சுருதிப் பெட்டி வாசிக்கிற ஆள் அவவின்ர கைக்கெட்டின தூரத்திலதான் இருக்கவேணும். அவா, " ஸ,ரி,க,ம,ப,த,நி... " எண்டு இழுக்கேக்குள்ள சுருதிப் பெட்டியைத் தப்பாமல் வாசிக்கோணும். இல்லையெண்டால் கையில வைச்சிருக்கிற வறுத்தலைக் கம்பால கைமொழியில தொடர்ந்து அடிச்சுக் கொண்டேயிருப்பா. ஒருக்கால் என்ர கையில சுருதிப் பெட்டியைத் தந்திட்டா. அண்டைக்குத்தான் நான் நரகத்தை அனுபவிச்சன். கணத்துக்குக் கணம் கைமொழியில சொட்டிக்கொண்டேயிருந்தா.

இரண்டாவது காரணம், தேசிய கீதத்தை முழுமையாகப் பாடமாக்கி ராகத்தோட பாடவேணும். தேவாரம், திருவாசகத்தைக் கூடப் பாடமாக்கி ஒரு மாதிரிப் பாடிக் கீடிச் சமாளிச்சுப் போடலாம். ஆனால் தேசிய கீதத்துக்கு அது சரிவரேல்ல. தேசிய கீதத்தை வடிவாப் பாடமாக்கிப் போட்டன். அந்த மனிசிக்கு முன்னால போய் நிண்டவுடன் தொடை நடுங்கத் தொடங்கிச்சுது. பாடமாக்கினதெல்லாம் அடியோட மறந்து போச்சு. மனிசி ஒவ்வொருவருக்கும் வறுத்தலைக் கம்பால விளாசத் தொடங்கிட்டுது. என்னோட இன்னும் சில பொடியளுக்கும் நல்ல விளாசல் விழுந்திச்சுது. வடக்கு கிழக்கு மற்றும் தமிழர் தாயகப் பகுதிகளில முதன்முதலாத் தேசிய கீதத்தால் பாதிக்கப்பட்டது நாங்களாத்தானிருக்கும். என்னோட விளாசல் வாங்கினதில ஆரோ ஒருத்தன் விசயம் விளங்கின வட்டாரமாயிருந்திருக்கிறான். அவன் போட்டுக்குடுக்க வேண்டிய 'இடத்தில' முறையாய்ப் போட்டுக் குடுத்திருக்கிறான். மறுநாள் ஒராள் வந்து பிரின்ஸிப்பலைச் சந்திச்சிட்டுப் போனார். பிறகு பிரின்ஸிப்பல் சங்கீத ரீச்சரைக் கூப்பிட்டார். என்ன நடந்திச்சுதோ தெரியாது. அவா முகங்கறுத்துப் போய் வந்தா. அவா ஏற்கனவே அரிசிக் காகக்கறுப்பி. அதோட இன்னுங் கறுத்தா எப்படி இருக்கும்? பாக்கவே சகிக்கேலாம இருந்திச்சுது. இன்னும் கொஞ்சமெண்டால் அழுதிடுவா போல இருந்திச்சுது. எனக்கு நடந்ததொண்டும் தெரியாது. இண்டைக்கும் இந்த மனிசி என்னைத் துலைக்கப்போகுது எண்டு குலை நடுக்கத்தோடைதான் நானிருந்தன். அண்டையிலயிருந்து நான் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறின கடைசி நாள் வரைக்கும் சங்கீத ரீச்சர் தேசிய கீதத்தைப் பற்றி வாய் திறக்கவேயில்லை. அதுக்குப் பிறகுதான் எனக்கு ஏதோ முறையான சம்பவம் நடந்திருக்கெண்டு விளங்கிச்சுது.

(தொடரும்)

# உயிரை மாய்த்தலும்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றைவிட சமூக க்காரணியாக கல்விநிலையும் இதில் தாக்கத்தைச் செலுத்துகிறது. கல்வி அறிவில் உயர்ந்து காணப்படுபவர்களில் தம் உயிரை மாய்த்துக்கொள்ளல் குறைந்தளவே அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த அவதானிப்புகளினோடு சமூகக் காரணிகளாக இத்தகைய தற்கொலைகள் தாக்கத்தைச் செலுத்துபவை பின்வருமாறு:

1.வறுமை/ தனிநபர் வருமானம் (Income level)
2.வேலையின்மை (Employment Wealth staitn)
3.சமத்துவமற்ற சமூகக் கட்டமைப்பு
4.தனிமையாக வாழ்தல் (Social isolation)

உயிரை மாய்த்தல் என்பது இறுதியில் தனிநபர் முடிவாக அமைந்தாலும் அந்த முடிவிற்கு இட்டுச்சென்ற காரணிகள் பெரும்பாலும் சமூகக் காரணிகளாக அமைகின்றன. எனவேதான் உயிரை மாய்த்தல் அல்லது தற்கொலை என்பது சமூக, உள மற்றும் உயிரியல் காரணிகளால் ஏற்படுகிறது என்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டியுள்ளது. பல உளவியல் நெருக்கடிகள், உளச் சமூகப் பிரச்சினைகள் , அதன் வழி ஏற்படுகின்ற உள நோய்கள் என்பவற்றின் பின்னால் பெரும்பாலும் சமூகக் காரணிகளே தாக்கம் செலுத்துகின்றன. அதிலும் குறிப்பாக தற்கொலையுடன் தொடர்புடைய மனச்சோர்வு நோய் கூட சமூக, உள, உயிரியல் காரணிகளால் ஏற்படுகின்றது. மனச்சோர்வின் சமூகக் காரணிகளை ஆராய்ந்தால் அது பெருமளவு மற்றைய பொதுப் பிரச்சினைகளின் சமூகக் காரணிகளினை ஒத்ததாகவே காணப்படுகின்றது.

சமய, சமூகத் தலைவர்கள், பொதுச் செயற்பாட்டாளர்கள் இதனை வெறுமனே உள மருத்துவ ப் பிரச்சினையாக மட்டும் காட்ட முற்படுவதன் மூலம் தங்களது பொறுப்புக்களைத் துறப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. வெறுமனே கேளிக்கை நிகழ்வுகளை சமூகச் செயற்பாடாக எடுத்துக்கொண்டு செயற்படுகின்ற துர்ப்பாக்கியம் எம்மிடமுண்டு. அதே போல இது முழுவதுமாக சமூகப்பிரச்சினை என்றும் இதில் மருத்துவத்துறைக்கு பங்கெதுவும் இல்லை என மருத்துவத்துறையினரும் ஒதுங்கி விட முடியாது. அதிலும் குறிப்பாக பொதுச் சுகாதாரத் துறையினர் வெறுமனவே ... மே சமூகம் ... வேதனைக்குரியது.

டெங்கு மரணங்களை விட தற்கொலை மரணங்கள் எமது சமூகத்தில் அதிகம் நிகழ்கின்றன என்பதை மறைத்தலாகாது. மிகக்குறைந்தளவில் மனித வலுவைக்கொண்ட உள மருத்துவ சேவை நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதனையே இடருடன் மேற்கொள்ள வேண்டிய நிலையில் தடுப்பு நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட முடியாத நிலையே தொடர்கின்றது. இதனை ஒரு பொதுச் சுகாதார அவசர நிலையாக அறிந்து அதற்காகச் செயற்பட்டு ஆளணிகளை உருவாக்க வேண்டியது மருத்துவத்துறையின் வகிபாகமாக அமைய முடியும் தனிமனிதர் சார்ந்த உயிரை மாய்த்தல்களை நாம் ஆராய்வோமாயின் அதில் பல உள நோய்கள் என்பன உள்ளடங்குகின்றன. உடல் ,உளம் சுகமற்றுக் காணப்படுகின்றமையும் இந்த நிலைக்கு இட்டுச்செல்லக்கூடியதே. அத்துடன் ஆளுமை சார்ந்த குறைபாடுகளும் இத்தகைய நிலைக்கு பெரும் பங்கு வகிக்கின்றன. அதனை விட தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட ஒருவர் அதனை மீண்டும் செய்வதற்கான ஏதுநிலையும் அதிகம். எனவே அவர்களை கண்காணிப்பதும் தொடராக ஆதரவு வழங்குவதும் இன்றியமையாததாகும்.

மேற்கு நாடுகள் பலவற்றில் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட உளவியல், உடற்கூற்றுப் பரிசோதனைகள் உளநோய்கள் என்பன அவர்களின் தற்கொலை முடிவெடுத்தலில் பெரும்பங்காற்றுகின்றன என்பதை வெளிப்படுத்தின. இது 50 - 75 சதவீதத்துக்கும் மேலாகக் காணப்படுகின்றது. ஆனாலும் எமது பிரதேசத்தில் இவ்வாறான ஆய்வுகள் ஏதும் மேற்கொள்ளப்படாதநிலையில், முடிவாகக் கூறமுடியாவிடினும் இங்கும் அதேகாரணிகள் தற்கொலைகளில் பங்குவகிக்கவே செய்கின்றது.

மதுபானம், போதைப்பொருள் பாவனை போன்றவற்றை உள மருத்துவப் பிரச்சினையாக நாம் கருதுகிறோம். ஆனால் அதனை சமூகப்பிரச்சினையாக கருதாமல் தனிநபர் பிரச்சினையாகவே கணிக்கின்றனர். மதுப்பாவனை மற்றும் போதைப்பொருகளுக்கு அடிமையாதல் போன்றவற்றால் சமூகக் காரணிகள் தீர்மானிக்கப்படுகின்றமை இலகுவாக மறைக்கப்பட்டு , அதனை தனி மனிதப்பிரச்சினையாக காட்டுவதன் மூலம் , இவ்வாறான பழக்கங்களை இலகுவாக மாத்திரை மூலம் குணப்படுத்தலாம் என்ற பொதுக் கருத்தாடல் உருவாக்கப்படுகிறது. ஆனால் தற்கொலையையும், போதைக்கு அடிமையாதலையும் நாம் ஒற்றைப்பரிமாணத்தில் பார்க்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடி வீடு



ரஜிதா அரிச்சந்திரன்

மகளிர் காப்பகத்தில் ஒரே பரபரப்பு. எல்லோரும் அங்குமிங்கும் நடந்தபடி இருந்தார்கள். எல்லோர் முகங்களிலும் கலவர ரேகைகள். நடப்பதை விளங்காதவளாக ஷோபா திக்குமுக்காடினாள்.

"என்ன பிரச்சினை ?" என தன் அருகில் இருந்த பெண்ணைக் கேட்டாள்.

" மல்லிகா எண்ட பிள்ளை கொஸ்ரலில் தங்கியிருந்தாள். அவள் திடீரென்று மயங்கி விழுந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்கிறார்களாம். அதாலதான் இந்தக்கலவரம்"

என்று அவள் விளங்கப்படுத்தினாள். கூடவே "ஷோபா உனக்கு ஒன்றும் இதைப்பற்றித் தெரியாமல் வாயை விடாதே . பிறகு வார்டன் எங்களைப் பிடிச்சுக் கொள்ளும். ஏன் சோலி ? நாங்கள் ஒதுங்கிப் போவோம்" என்று எச்சரித்துவிட்டு நகர்ந்தாள். ஷோபாவும் தன் ரூமுக்குச் சென்றுவிட்டாள். திடீரென்று பொலிஸ் ஜீப் ஒன்று 'கிறீச்' என பிறேக் போட்டு நின்றது. வார்டன் பயந்து போய், வந்த பொலிஸ்காரரிடம் "என்ன சேர் பிரச்சனை?" என்று பதறினார்.

"ஒன்றுமில்லை வாங்கோ உங்களோட கதைக்கோணும்" என்று சொல்லிவிட்டு. வார்டனின் அலுவலகத்தில் போய் அமர்ந்துகொண்டார்.

"மிஸ் ! நீங்கள் மல்லிகாவை சரியாக் கவனிக்கவில்லை. அவா போதை பாவிச்சிருக்கிறா எண்டு மருத்துவமனையிலிருந்து எங்களுக்கு முறைப்பாடு வந்திருக்கு. அது தொடர்பாத் தான் உங்கடளை விசாரிக்க வந்தனான். அவவின்ர நண்பிகள் எல்லாரையும் கூப்பிடுங்கோ" என்று பொலிஸ்காரர் சொல்லிமுடிக்கமுன்னரே இன்ரர்கொம்ல கோல் பண்ணி "மல்லிகாவின்ர ரூம்ல இருந்த எல்லாரையும் என்ர ஒப்பீஸுக்கு வரச் சொல்லுங்கோ" என்று நடுங்கும் குரலில் சொன்னார் வார்டன். வந்த பெண்களிடம் விசாரணை செய்தும் உருப்படியான தகவல்கள் கிடைக்கவில்லை. மல்லிகாவைப் பற்றி அவர்கள் நல்லவிதமாகவே பொலிஸிடம் சொன்னார்கள்.

"அவள் பெரிசாக் கதைக்கமாட்டாள். நாங்களும் அளவாத்தான் கதைப்பம். விடிய அவா வேலைக்குப் போடுவா. இரவுதான் சந்திப்பம். அவாட்ட எந்தக் கெட்ட பழக்கமும் இருந்ததா எங்களுக்குத் தெரியேலை" என்று அவர்கள் இருவரும் சொல்லிவைத்தாற்போல ஒரேமாதிரிச் சொன்னார்கள். ஆனாலும் பொலிஸுக்கு நம்பிக்கையில்லை.

"இவர்களின் ரூமைத் தேடிப் பாருங்கோ" என்று இன்ஸ்பெக்டர் உத்தரவிட இவர்களுக்கு கை கால் நடுங்க ஆரம்பித்தது. இதைப் பார்த்த பொலிஸ்காரருக்கு சந்தேகம் இன்னும் வலுத்தது. பொலிஸார் அந்த ரூமைத் திறந்து சோதிக்கத் தொடங்கினர்.

"சேர்...!!" என்று ஒரு பொலிஸ் கூவ, இன்ஸ்பெக்டர் அந்த ரூமுக்குள் நுழைந்தார். அவர்களின் படுக்கைக்கு கீழே பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஹெரோய்ன் பவுடரை கையில் எடுத்து வைத்திருந்தார் ஒரு பொலிஸ்காரர். அவ்வளவுதான். அந்த ரூமில் இருந்த மூவரும் ஹெரோய்ன் பாவிக்கிறார்கள் என்பது உறுதியாகிவிட்டது. பின்னர் மளமளவென்று காரியங்கள் நடந்தன. மல்லிகாவின் ரூமில் தங்கியிருந்த மற்ற இருவரும் கைதானார்கள். ஹொஸ்டலுக்கும் 'சீல்' வைத்துவிட்டார்கள். அங்கு தங்கியிருந்த மற்றப் பிள்ளைகள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றார்கள். ஆனால் இப்போது ஷோபா மீண்டும் நிர்க்கதியானாள். அப்போதும் கைகொடுத்தது அசோக் தான். அவளை தன் வீட்டுக்கு அழைத்து வந்தான். வீட்டில் அவன் சகோதரர்கள் குழம்பினார்கள். இருப்பினும் அசோக் நிலைமையைப் புரியவைக்க, தாய் இவர்களுக்கு ஆதரவாக இருந்தாள். ஷோபாவுக்கு தனி அறை ஒதுக்கிக் கொடுத்தார்கள். நன்றாகக் கவனித்தார்கள். நாளாக நாளாக ஷோபா அசோக்கின் வீட்டில் ஒருத்தியானாள். அந்த வீட்டில் இருந்தோருக்கும் அவளை நன்கு பிடித்துக் கொண்டது.

✦✦✦✦✦

4

சஞ்சீவி தொடர்கதை

ஷோபாவின் பெரியம்மா விக்னேஸ் லண்டனில் படுத்த படுக்கையானாள். ஷோபாவின் யோசனையே அவளை வாட்டி வதைத்தது. விக்னேஸின் பிள்ளைகளும் அவளை பராமரிக்க முடியாது என்று 'ஹோமில்' சேர்த்து விட்டார்கள். அவளின் கடைசி மகன் அருண் தான் விரும்பிய வெள்ளை இனப் பிள்ளையை கட்டப் போறன் என ஒற்றைக் காலில் நிற்க, மற்றவர்களும் வேறு வழியின்றி சம்மதித்தனர். 'ஹோமில்' இருந்த தாய் விக்னேஸையும் அழைத்துவந்து திருமணத்தினை நடத்தி , மறுபடியும் 'ஹோமிலேயே' விட்டார்கள். அருணின் மனைவி டொடா நல்ல பண்புடையவள். திருமணமாகி வந்தவுடன் அவள் செய்த முதல்வேலை, தன் மாமியாரான விக்னேஸை 'ஹோமில்' இருந்து அழைத்து வந்தது தான்.

டொடா மிகவும் மகிழ்ச்சியாக மாமியாரைக் கவனித்து வந்தாள். விக்னேஸும் டொடாவும் தாயும் பிள்ளையும் போலத்தான் பழகினார்கள். ஒருநாள் இருவரும் கதைத்துக் கொண்டிருந்தபோது, "எனக்கு என்ர பிள்ளையளைப் பற்றிக்கூட கவலை இல்லை.

ஆனால் தங்கச்சி ஆனந்தியின்ர பிள்ளை ஷோபாவைப்பற்றித்தான் ஒரே யோசனை" என்று விக்னேஸ் தன் மனக்கவலையை டொடாவிடம் பகிர்ந்து கொண்டாள்.

கமலாவுக்கு தாங்கள் ஷோபாவைத் தேடி வருவதாகப் போன் செய்து சொல்லிவிட்டு, டொடாவும், விக்னேஸும், அருணும் இலங்கைக்குச் செல்லத் தயாரானார்கள்.

(தொடரும்)

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

1505-1948 வரை

## 1946 மார்ச் 07

சுவாமி விபுலானந்தரின் உருவப்படம் சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திறந்து வைக்கப்பட்டது. தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் உருவப்படத்தை திரைநீக்கம் செய்தார்.

## 1946 மார்ச் 16

பிரபல தமிழ் எழுத்தாளர் கு.ப.ரா. வின் மறைவையொட்டி அவரது குடும்பத்துக்கு உதவும் பொருட்டு 'ஈழகேசரி' பத்திரிகை நிதி திரட்டியது. 7795.30 சதம் நிதி சேர்ந்தது. இதில் கு.ப.ராவின் பாரியாரிடம் 500.00 ரூபா, கையளிக்கப்பட்டது; மிகுதிப்பணம் அவரது கணக்கில் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

## 1946 ஏப்ரல் 22

இரண்டாம் உலகயுத்தத்தின் போது சிங்கப்பூரை தனது கட்டுப்பாட்டின் கீழ் ஜப்பான் கொண்டு வந்திருந்தது. இதனால் மலாயாவில் வசித்து வந்த இலங்கையர்கள் பெரும் அச்சத்துடன் இருந்தனர். காடுகளில் தஞ்சமடைந்து பல்வேறு துன்பங்களை அனுபவித்தனர்.(ஜப்பானியப் படைகளிடம் சிக்கியவர்களை ஜப்பானியப் படையினர் சவர்க்கார நீரைப் பருகக் கொடுத்துவிட்டு, காலால் மிதித்துக் கொன்றதாக சிங்கப்பூரிலிருந்து திரும்பிய சிலர் நான் சிறுவனாக இருந்த காலத்தில் என்னிடம் கூறியுள்ளனர்.) 1946 ஏப்ரல் 22 அன்று'அருண்டேல் காஸில்' என்ற கப்பலில் 1,193 பேர் கொழும்பை வந்தடைந்தனர். இவர்களில் நூறு பேர் சிங்களவர்கள்; ஏனையோர் யாழ்ப்பாணத்தவர்கள். இப்படி வந்த அகதிகளை அமைச்சர் மகாதேவா வரவேற்றார். யாழ்ப்பாணத்தவர்களுக்கு புகையிரதத்தில் பயணம் செய்வதற்கு விசேட கூப்பன் வழங்கப்பட்டது.

பிற்பகல் மூன்று மணிக்கு கப்பலிலிருந்து பயணிகள் இறங்கத்தொடங்கினர். யுத்தத்தில் கணவனைப்பறிகொடுத்த பெண்களும்.குழந்தைகளைப் பறிகொடுத்த பெற்றோரும் உறவினர்களைக் கண்டதும் துக்கமேலீட்டால் கண்ணீரை அடக்க முடியாது தவித்தனர்.

மலாயா அகதிகளுக்கென தமிழ்க் காங்கிரஸ் ஏற்கனவே நிதி சேகரித்திருந்தது. கப்பலில் பயணிகளுக்கு ஒழுங்கான உணவு கிடைக்கவில்லை. கப்பலால் இறங்கியதும் அனைவருக்கும் 17 விதமான உணவுகள் பரிமாறப்பட்டன. சிறுவர்களுக்கு இனிப்பு வகைகளும் பரிமாறப்பட்டன. கப்பல் புறப்பட்டபோது திரு.எம்.சரவணமுத்து பயணிகளுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்திருந்தார்.யாழ்ப்பாண அகதிகள் 652 பேர் விசேட புகையிரதம் மூலம் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்தடைந்தனர். மலாயா அகதிகளை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் C.S.குமாரசாமியும் அவரது பாரியாரும் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் வரவேற்றனர். தமிழ் காங்கிரஸின் மலாயா அகதிகளுக்கான உதவிக்குழுவினர் அகதிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தனர்.

## 1946 மே 14

தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டுள்ள பரமேஸ்வராக் கல்லூரி வெள்ளி விழா நிகழ்வுகள் 14.5.1946 அன்று தொடங்கி இரு வாரங்கள் சிறப்பாக நடைபெற்றன. வெள்ளிவிழாவையொட்டி களியாட்ட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இறுதி நாளான 29.5.1946 அன்று எம்.எஸ்.சுப்புலட்சுமியின் இன்னிசைக்கச்சேரியும் இடம்பெற்றது.

டி.எஸ்.சேனநாயக்க ஐக்கிய தேசியக்கட்சியை ஆரம்பித்தார். சிங்கள மகாசபை என்ற அமைப்பை வைத்திருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவும் ஐக்கியதேசியக்கட்சியில் இணைந்து கொண்டார். இலங்கை தேசிய காங்கிரஸும், முஸ்லிம் லீக்கும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டன. திரு. மொலமூரே யாழ்ப்பாணம் வந்து சிங்களவர்களும், தமிழர்களும் இணைந்து இலங்கையின் சுதந்திரத்துக்காக உழைக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார். அவர் தனதுரையில் "நாங்கள் கண்டிச் சிங்களவர்கள். நாங்கள் சில சமயங்களில் தமிழ் அரசர்களின் ஆட்சியின் கீழ் இருந்துள்ளோம். எமது உடம்பில் ஓடுவது தமிழ் இரத்தம். நீங்கள் தாராளமாக எம்மை நம்பலாம்" என உரையாற்றினார்.

சமசமாஜக் கட்சித்தலைவர் டாக்டர் என்.எம்.பெரேரா யாழ்ப்பாணம் வந்து ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்தார். சுன்னாகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் "இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கப்போகிறது. டி.எஸ். சேனநாயக்காசுதந்திர இலங்கையின் முடிசூடா மன்னனாகத் திகழப்போகிறார் இதனை உங்களது (தமிழ்) சட்டசபை உறுப்பினர்களுக்கு எடுத்துச்சொல்லுங்கள்" என உரையாற்றினார்.



'சந்திராயன் விஞ்ஞானிகள் தமிழர்கள்' என பெருமைபட்டுக்கொண்டிருக்கும் வேளையில் யாழ்ப்பாணத் தமிழர் ஒருவரின் சாதனை பற்றி எடுத்துக்கூறுவது பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன்.

உடுப்பிட்டியைச்சேர்ந்த திரு.கந்தையா, ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவன்.கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற கந்தையா பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அணு ஆராய்ச்சித்துறை உற்பத்திகளின் தலைவராக நியமிக்கப்பட்டார்.அங்கு அதிர்வலைகள் பற்றிய ஆராய்ச்சி யில் ஈடுபட்டார்.அத்துடன் RADIO LOCATION ஆராய்ச்சியிலும்,cavendish ஆய்வு கூடத்தில் CYCLORTON HIGH TENSION IN NUCLEAR ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். இந்த ஆய்வு கூடத்தின் தலைவராக கந்தையாவே விளங்கினார்.

இவரைப்பற்றிய மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் 1946.06.25அன்று வெளிவந்த HINDU ORGAN பத்திரிகையை எடுத்துப்பார்க்கவும். அணு விஞ்ஞானம் தொடர்பாக இவர் பல்வேறு சர்வதேச சஞ்சிகைகளில் எழுதிய ஆக்கங்கள் இணையத்தில் உள்ளன.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org